விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (11.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசுடன் இருந்து கொண்டு கூட்டமைப்புடன் இணைவதா?

## ஆராய வேண்டும் என்கிறார் மு.கா. பிரதித் தலைவர்

மத்திய அரசில் இருந்துகொண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முடிவு எடுப்பதென்பது சாத்தியமற்றதாகவே இருக்கும். எவ்வாறாயினும் உறுதியான முடிவுடனேயே நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரான காபீஸ் நஸீர் அகமர் சயினுலாப்தீன் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## மண் சரிவில் சிக்கி 6 படையினர் பலி



(கொழும்பு)

தியத்தலாவை இராணுவ பயிற்சி முகாமில் ஏற்பட்ட மண்சரிவினால் ஆறு இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இரண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் ஆட்சியைப் பெற முதலமைச்சர் பதவியை வழங்கலாம் முன்னாள் முதலமைச்சர் சுட்டிக்காட்டு



கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை பலத்தை கைப்பற்ற அரசாங்கம் தவறியுள்ளதால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதல் அமைச்சர் பதவியை வழங்கி அந்தக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதில் தனக்கு ஆட்சேபம் இல்லையென முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டுச் சென்றதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு நிறுத்திய (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநருக்கு கடிதம் அனுப்பிவைப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜய விக்ரமவிடம் நேரில் சமர்பிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதம் ஏற்கெனவே கிழக்கு மாகாண ஆளுநருக்கு தொலைநகல் மூலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (20ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் பதவியைப் பெற ஹக்கீமுக்கு வலியுறுத்தல்!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்க வேண்டுமாயின் முதலமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என வலியுறுத்துமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர்கள் கட்சியின் தலைவரான் ரவூப் ஹக்கீமிடம் வலியுறுத்தி வருவதாக தெரியவருகிறது.

அப்படியில்லையென்றால் மத்திய அரசாங்கத்தில் மூன்று பிரதியமைச்சர் பதவிகளும், மாகாணத்தில் இரண்டு அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட வேண்டும் என அவர்கள் நிபந்தனை முன் வைத்துள்ளனர்.

இது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விசேட கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தவுள்ளார்.

இந்த நிலையில் கிழக்கு மாகாண முதல் அமைச்சர் பதவி இரண்டு தவணைகளுக்கு ஒருவர் வகிக்கும் வகையில் இரண்டு கட்சிகளைச் சேர்ந்த இருவர் மாறிமாறி பதவியில் அமர்த்தப்படுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## நீதிமன்றத் தாக்குதல் 21 பேர் சரண்!

மன்னார் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தி அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் வழக்கில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் 21 பேர் தம்மிடம் சரணடைந்திருப்பதாக மன்னார் பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த வழக்கு நேற்று ம்மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொலிஸார் இந்த சந்தேக நபர்களை நீதிவான் முன்னிலையில் நிறுத்தியிருந்தனர்.

இந்த வழக்கில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 19 பேர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்கள். (20ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்று தவறுகளை மாற்றியமைத்து தமிழ்-முஸ்லிம் உறவை பலப்படுத்துங்கள்

## மனோ கணேசன் அழைப்பு

கிழக்கு மாகாணத்தில் எதிரணிக்கு பெரும்பான்மை கிடைத்துள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆட்சியை வீழத்தும் பயணம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கு பெருந்தன்மையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது கடந்தகால வரலாற்று தவறுகளை மாற்றியமைத்து தமிழ்-முஸ்லிம் உறவை கட்டியெழுப்புவதுடன், இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் பயணத்தையும் ஆரம்பிக்க வேண்டும். இது தமிழ்பேசும் மக்களதும், நல்லெண்ணம் கொண்ட சிங்கள மக்களினதும் விருப்பம் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை நாம் சப்ரகமுவ தேர்தலில் எடுத்து காட்டியுள்ளோம்.



சப்ரகமுவவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார சபையின் கட்டிடத்தை காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

மின்சார சபைக்கு என யாழ்ப்பாணத்தில் இரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்ற போதிலும் அது குறித்து அதிகாரிகள் எவருக்கும் தெரியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட மாகாணத்தின் உட்கட்டுமானத் திட்டமான 'எந்திப்' திட்டத்தில் இலங்கை மின்சார சபையின் வட மாகாண மின் பொறியியலாளருக்கான அலுவலகக் கட்டிடம் மற்றும் சபைக் கட்டிடம் என இரண்டு கட்டிடங்கள் சுமார் 8 மில்லியன் ரூபாய் பெறுமதியில் அமைக்கும் பணி இடம்பெற்று வருவதாக அறிக்கை ஒன்று சமர்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண (20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போனோர் தொடர்பில் வவுனியாவில் நாளை ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

கைதிகள், காணாமல்போனோர் தொடர்பில் நாளை 12-ம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள பிரார்த்தனை மற்றும் அமைதி ஆர்ப்பாட்ட நிகழ்வில், அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளருமான மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியா குருமண்காடு காளி கோவிலடியில் நாளை 12-ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரார்த்தனை மற்றும் அமைதி ஆர்ப்பாட்ட நிகழ்வில்,

நீண்டகாலமாக அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போர், சரணடைந்து தடுத்து வைக்கப்பட்டிருப்போர், சரணடைந்து காணாமல்போனோர், கடத்தப்பட்டுக் காணாமல் போனோர் ஆகியோர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் அணி திரண்டு கலந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரனால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகம் கிடையாது! பொன்சேகா குற்றச்சாட்டு

(நுவரெலியா)

இந்த நாட்டில் ஜனநாயகம் கிடையாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நீங்கள் அனைவரும் மரண பயத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உங்களுக்குக் கிடைக்காமல்போன உரிமைகளை மீளப்பெற்றுக்கொடுப்பதே எமது பிரதான இலட்சியம். நீங்கள் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தல்

தஞ்சம் கோரி அவுஸ்திரேலியாவிற்கு பயணம் செய்யும் வயது குறைந்த அகதிகளின் உரிமைகளை பாதுகாக்கவேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் தஞ்சம் கோரி யுள்ள சிறுவர் அகதிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் நோக்கில் பயணித்த அகதிகளே இவ்வாறு இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் அகதிகளுக்குத் தேவையான அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இலங்கை, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த சிறுவர் அகதிகள் இவ்வாறு அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இவர்களின் அடிப்படை உரிமைகளை பாதுக்காக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றின் மூலம் கோரியுள்ளது. (எ-11)

# ஜெயலலிதா - மன்மோகன் சிங் இருவரையும் இழிவுபடுத்தி கார்ட்டூன்

தமிழக முதல்வரையும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கையும் அநாகரீகமாகவும், கேவலப்படுத்தியும் இலங்கையின் பல பகுதிகளில் கார்ட்டூன்கள் வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரு கொழும்புப் பத்திரிகையில் தமிழக முதல்வர் – பிரதமரை வைத்து வரைந்துள்ள கார்ட்டூனும் பிரதி அடித்து ஒட்டப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவை இழிவுபடுத்தும் செயலை அனுமதிக்க முடியாது என்றும், இதுபோன்ற ஈனச் செயல்களில் ஈடுபட்டவர்களை உடனே இலங்கை அரசு கைது செய்யவேண்டும் என தமிழகத்தில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிளும், மனித உரிமை ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்திற்குச் சென்ற இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் கொதிப்படைந்துள்ள இலங்கை சிங்கள மக்கள் இதனை செய்திருக்கக்கூடும் என தமிழக செய்திகள் தெரிவித்தன. (எ-11)

# நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கு

நல்லூர்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு நல்லூர்க் கோட்டத்தால் இன்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த 'சென்சஸ்' தொடர்பான கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறுமென நல்லூர்க் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். மாணிக்கராசா அறிவித்துள்ளார். (ந)

# பணிப்பாளர் நியமனம்

பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக் குழுவின் விசாரணைப்பிரிவு பணிப்பாளரான தம்மிக பெரேரா, அவ்வாணைக்குழுவின் பிரதி பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக் குழுவின் உத்தியோகஸ்தர்களுடன் நடத்திய விசேட கூட்டத்தின் போது ஆணைக்குழுவின் புதிய தலைவரான கலாநிதி நாலக கொடஹேவா இது குறித்து அறிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்நியமனம் குறித்து தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாணைக்குழுவிற்கு பணிப்பாளர் நாயகம் இல்லை. பதில் பணிப்பாளர் நாயகமாக பேராசிரியர் ஹரீந்திர திஸாபண்டார கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

(C-941)

YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

புதிய வகுப்புகள் : சனி 15.09.2012

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (392)


# வற்றி வரும் இரணைமடுக்குளம் விவசாயிகள் திண்டாட்டம்!

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீரானது தற்போது வற்றி வருகின்றது. அரசாங்கத்தால் யாழ்ப்பாண விவசாயிகளுக்கு நீர் வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட இரணை மடுக்குளம் அமைந்துள்ள பகுதியில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கூட இக்குளத்து நீர் தற்போது பற்றாக்குறையாக காணப்படுகிறது.

இதன் விளைவாக இவ்வாண்டில் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படும் நீரின் அளவை மட்டுப்படுத்துவதென இதனுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

எவ்வாறெனினும், இவ்வாறு வரையறுக்கப்பட்ட நீரின் அளவுக்கு மேலதிகமாக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மேலதிக நீர் வழங்கப்படமாட்டாது எனவும், இது சட்ட ரீதியற்ற பயிர்ச் செய்கையாக கருதப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கே இரணை மடுக் குளத்து நீர் பற்றாக்குறையாக காணப்படும் போது, இக்குளத்திலிருந்து யாழ் மாவட்டத்திற்கு அதிகாரிகள் எவ்வாறு நீரை விநியோகிக்க முடியும் என சில விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வடக்கில் மிகப்பெரிய குளமான இரணை மடுக்குளமானது 1902இல் கட்டப்பட்டது. பிரித்தானிய ஆட்சிக்காலத்தின் போது, 1866 நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனப் பொறியியலாளரான ஹென்றி பார்க்கர் இரணைமடுக்குளத்திற்கான வரைபை வரைந்தார்.

இரணைமடுக்குளத்தை அமைப்பதற்கான முதற்கட்ட பணி 1902 இல் நிறைவுற்றது. இதற்காக ரூபாய் ஒரு இலட்சத்து 94 ஆயிரம் செலவிடப்பட்டது.

இக்குளத்தின் ஆழம் 22 அடியாகக் காணப்பட்டது. இது 44 ஆயிரம் ஏக்கரை தனது கொள்திறனாக கொண்டிருந்தது. இதன் பின்னர் இக்குளத்திற்கான இரண்டாம் கட்ட வேலைத்திட்டமானது 1954இல் பூர்த்தியாக்கப்பட்டது.

இதன் பின்னர் இக்குளத்தின் ஆழம் 30 அடியாகவும் இதன் கொள்திறன் 80 ஆயிரம் ஏக்கராகவும் அதிகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரணைமடுக்குளத்திற்கான மூன்றாம் கட்டப்பணி 1977 இல் பூர்த்தியாக்கப்பட்டது. தற்போது 9 கிலோமீற்றர் நீளமும் 2 கிலோமீற்றர் அகலத்தையும் கொண்ட இக் குளமானது 34 அடி ஆழத்தைக் கொண்டுள்ளது.

32.5 கிலோமீற்றர் வாய்க்கால்களின் ஊடாக கிளிநோச்சி மாவட்டத்தில் 20 ஆயிரத்து 882 ஏக்கர் நிலப்பரப்பில் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதற்கு இரணை மடுக் குளம் துணைபுரிகிறது. (எ-11)

# அவுஸ். செல்ல முயன்ற 47 பேருக்கு பிணை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கில் இருந்து கடந்த 27ம் திகதி சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லமுயன்றபோது கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 51 பேரில் 47 பேர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் 47 பேரை 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்ததோடு 4 முக்கிய நபர்களை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எ-11,24)

# புதிய தூதுவருடன் பீரிஸ் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மைக்கல் ஜேசிசன் கொழும்பில் நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை முதல் முறையாகச் சந்தித்துப் பேசியுள்ளார்.

புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்ட மைக்கல் ஜே சிசன் தனது பதவி உறுதிப்படுத் தப்பட்டதும் அமெரிக்க செனெட் உறுப்பினர்கள் மத்தியில் தெரிவித்த கருத்து இலங்கை அரசுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் முக்கிய கவனமெடுக்கப் போவதாகவும், ஊடகப் பணியாளர்கள், மனித உரிமையாளர்களின் பாதுகாப்பில் கூடிய கவனம் செலுத்தப் போவதாகவும் அவர் கூறியிருந்தார்.

இலங்கை தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய அவர் தனது பணியை பொறுப்பேற்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தார். நேற்று முதல் முறையாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை சந்தித்துப் பேசியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் இருதரப்பு வர்த்தக விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

அதேவேளை, நாளை மறுதினம் இலங்கை வரவுள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக் கான உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கையும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வியாழக்கிழமை சந்தித்துப் பேசவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மரத்தில் தொங்கியநிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மாமரமொன்றில் தூக்கில் தொங்கிய் நிலையில் குடும்பஸ்தரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கோண்டாவில் கிழக்கு நவரத்தினராசா வீதியிலுள்ள வீடொன்றில்நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்தவரும் 2 பிள்ளைகளின் தந்தையாருமான எஸ். இராஜகுரு (வயது 42) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தூக்குச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த குடும்பஸ்தர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் சம்பவ தினத்தன்று இரவு 11.30 மணி வரை தொலைக் காட்சி பார்த்துக் கொண்டு இருந்தார் எனவும் அவரது குடும்பத்தினர் உறங்கிய பின்னரே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சடலம் யாழ் போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-4)


ஒரே ENGLISH COURSE மூன்று தகைமைகள்

1.Spoken English / Certificate / Dip in English
(Speaking, Reading, Listening and writing)
2.Personality Development
3.Leadership Training

6th Batch: Mon to Thu
7th Batch: Sat &Sun
ஒரு Batchஇல் 10 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்

எதிர்கால சவால்களை வெல்லக்கூடிய விதத்தில் ஆங்கிலப் பாடநெறிகள் தயாரிக்கபட்டுள்ளதால் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் தலைமை தாங்கும் இயல்பும் வளர்கின்றது.

இவ் ஆங்கிலப் பாடநெறிமுழுமையான ஆங்கில சூழலில் ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு நிகரான அனுபவமிக்க ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது. மாணவர்கள் ஆங்கிலத்தை பயிலுவது மேலும் இலகுவாகின்றது.

சர்வதேச ஆங்கிலத் தகைமைகளான

IELTS, TOEFL, City & Guilds, Etc...

VISA SERVICE / STUDY ABROAD

(ஆங்கிலப் பாடநெறியில் கலந்துகொள்ளும் சகலமாணவர்களுக்கும் சிங்களம் மற்றும் அடிப்படை கணனிப் பாட நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும்.)

IISEEES NALLUR CAMPUS

762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

0212224728, 0777444225

(C-920)



பாராட்டி வாழ்த்துகிறோம்

க. ஸ்ரீமோகன்

(பிரதேச செயலர், தெல்லிப்பழை)



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி பதவியுயர்வு பெற்று தெல்லிப்பழை பிரதேச செயலராக கடமையாற்றும் க. ஸ்ரீமோகன் [பிரதேச செயலர், தெல்லிப்பழை] அவர்கள் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் : ஞா. அருட்செல்வன் புளியங்கூடல்

(C-1019)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பொய் சொல்லும் குழந்தைகள்

"அது ஒரு குழந்தை சேர்... அதற்குப் பொய் சொல்லத் தெரியுமா?" அப்படியென்று சொல்வதுண்டு.

ஆனால், மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள்... நான்கு வயது அல்லது அதற்குச் சற்று குறைந்த வயதிலேயிருந்து குழந்தை பொய் சொல்ல ஆரம்பித்து விடும்.

சமீப தகவலின்மூலம் இது வெளிப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீண்ட காலமாக ஆராய்ந்ததில் கண்டு பிடிக்கப்பட்டதொன்றாகும்.

பெற்றோர் சற்று அவதானமாக இருந்தால் குழந்தைகள் பொய் சொல்ல வேண்டிய அவசியமே வராது.

ஒரு குழந்தை சிறிய பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது. அக்குழந்தை விளையாடும்போது கைதவறி அந்தப் பொம்மை கீழே விழுந்து உடைந்து விட்டது.

உடனே அக்குழந்தை அம்மாவிடம் போனது... "அம்மா... அந்தப் பொம்மையை நான் கீழே போட்டு உடைத்து விட்டேன்" என்று கூறியது.

அந்தத் தாயார் குழந்தையைப் பார்த்து திட்டுவார் அல்லது அடிப்பார்.

இப்போது அக்குழந்தை யோசித்து ஒரு முடிவுக்கு வந்து விடுகிறது... உண்மையைச் சொன்னால், அம்மா திட்டுவா போல் உள்ளது. அடுத்த தடவை அப்படி ஒரு பொம்மையை அது உடைத்தால், அதை அம்மாவிடம் சொல்லாமலே மறைத்து விடும் அல்லது "பொம்மையை நான் உடைக்கவில்லை... ம்மா... பூனைதான் தள்ளிவிட்டு உடைந்தது" என்று பொய் சொல்ல ஆரம்பித்து விடும்.

குழந்தைகள் பொய் சொல்ல ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் இது தான்.

"பொம்மையை உடைத்து விட்டேன்" என்று குழந்தை சொன்னால்,... உடனே கோபப்படாதீர்கள்... உங்கள் அதிர்ச்சியைக் காட்டாதீர்கள்... "ஏன் உடைத்தாய்?" என்று திட்டாதீர்கள்... அடிக்காதீர்கள்... அந்தச் சமயத்திலே அமைதியாக குழந்தை கூறும் கதையை "அப்படியா" என்று கேளுங்கள்.

அதன்பின்னர் பொம்மையை எவ்வாறு கவனமாக வைத்துக் கொண்டு விளையாட வேண்டும் என்பதை சொல்லிக்கொடுங்கள். அதுதான் சிறந்ததாகும்.

ஒரு குழந்தை நம்மிடம் பொய் சொல்லும்போது அதன் நடவடிக்கை எப்படி இருக்கும் என்பதைப்பற்றி நிபுணர்கள் சில குறிப்புகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

❖ பொய் சொல்லும் எந்தக்குழந்தையும் எமது முகத்தைப் பார்த்து பேசுவதற்குத் தயங்கும்.

❖ குரலில் ஏற்றத்தாழ்வு இருக்கும்.

❖ முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை முன் வைக்கும்.

சிறிய வயதில் மட்டும் தான் மேற்கண்டவாறு இருக்கும். ஆனால், கிட்டத்தட்ட 11 வயதை அடைந்ததும் மிகத் திறமையாகப் பொய் பேச ஆரம்பித்து விடும்.

பிள்ளைகளிடம் நாம் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டிய இரு சந்தர்ப்பங்கள் உள்ளது. இந்த இரு கட்டத்திலேயும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

முதற்கட்டம்... மூன்றிலிருந்து நான்கு வயது வரைக்கும் உள்ள பருவத்தில் பொய் பேசத் தெரியாது. குழந்தைகளுக்கு திட்டமிட்டுப் பொய் பேசத் தெரியாத பருவம். அந்த சமயத்திலே குழந்தைகளிடம் நாம் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும்.

இரண்டாவது கட்டம்... கட்டிளமைப்பருவத்தில் மிகவும் பிரதானமான பொய்களைப் பேச ஆரம்பித்து விடுவார்கள். பொய் பேசுகிறோம் என்ற குற்ற உணர்வே ஏற்படுவதில்லை. அது பழகிப் போய்விடும்.

இது மாதிரியான சமயதிலேதான் பிள்ளைகளிடம் நாம் மிகவும் நட்பாகப் பழக வேண்டும். நம்மிடம் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை சோர விடக்கூடாது.

குழந்தைகளைப் பொறுத்த வரைக்கும்... நாம் எந்த அளவிற்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம் என்பது முக்கியமானதாகும்.

எந்த அளவிற்கு அவர்களின் சுதந்திரத்திலே நாம் தலையிடாமல் இருக்கிறோம் என்பது அதைவிட முக்கியாகும்.

ஒரு பாடசாலைக்கு வயதானவர் வந்து தலைமை ஆசிரியரின் அறையினுள் நுழைந்தார்.

நான்காம் வகுப்பில் கல்வி கற்கும் பாலுவைப் பார்க்க முடியுமா என்று ஆசிரியரிடம் கேட்டார்.

"பாலு உங்களுக்கு என்ன முறையான பையன்?" என்று தலைமை ஆசிரியர் அந்த வயதானவரைப் பார்த்துக் கேட்டார்.

"பாலு என்னுடைய பேரன்" என்றார் அந்த வயதானவர்.

சற்று கதிரையில் அமரும்படியாகக் கூறிவிட்டு பாலுவிற்கு அழைப்பாணை அனுப்பினார்.

"அன்றைய தினம் வகுப்பிற்கு பாலு வரவில்லை" ஆசிரியர் பதிலனுப்பி இருந்தார்.

"ஏன்?" என்று தலைமை ஆசிரியர் கேட்டார்– அந்த ஆசிரியரிடம்...

"பாவம்... அந்த பையனுடைய தாத்தா இறந்து விட்டதாகக் காலையிலே அழுது கொண்டே வந்து சொல்லி விட்டுப் போனான்" என்றார் ஆசிரியர்...

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறைப்பொதுச் சுகாதார பரிசோதகர் பிரி வுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஆறுகால்மடம், பழம் வீதியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை ஆறுகால்மடம் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை செழியன் வீதியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அராலி வீதி, புதிய குடியிருப்பு சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஜின்னா வீதியிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஆசாத் வீதியிலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணி வரை நாவலர் வீதி, எம்.ஓ. ஒழுங்கைப் பகுதியிலும் வைத்து வழங்கப்படும்.

17 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை கெனடி வீதி, சேமக்காலை வீதியிலும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நாவலர் வீதி, முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத்தெருவிலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி, நாவாந்துறை தபாற்கந்தோர் அருகிலும் வைத்து வழங்கப்படும்.

18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை வசந்தபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நித்தியஒளி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொட க்கம் பிற்பகல் 1.30 மணி வரை சூரியவெளியிலும் வைத்து வழங்கப்படும்.

19 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சென். நீக்கலஸ் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கோவில் ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படும்.

20 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை கடற்கரை வீதி, காதிஅபூபக்கர் வீதி சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கண்ணாபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கண்ணாபுரம் முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத் தெருவிலும்வைத்துவழங்கப்படும்.

21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சோலைபுரத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கற்குளம் வீதியிலும் வைத்து வழங்கபடும்.

24 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை வெள்ளாந் தெருவிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சிவன் பண்ணை வீதி, கொட்டடி சனசமூக நிலைய கலை யரங்கத்திலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை சீனி வாசகம் வீதி, கொட்டடி சன சமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படும். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 | 40 |
| தக்காளி | 60 | 40 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 30 | 35 | 35 |
| கோவா | 70 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 80 | 100 |
| பூசணி | 40 | 25 | 30 | 40 |
| புடோல் | 40 | 30 | 35 | 40 |
| வாழைக்காய் | 45 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 50 | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | -- |
| பயற்றங்காய் | 60 | 40 | 75 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 110 |
| பீற்றூட் | 45 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 10 | 30 | 60 | 30 |
| போஞ்சி | 80 | 80 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 | -- |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 250 | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 | 25 |

# இராசி பலன்

*11.09.2012*

*(ஆவணி 26, செவ்வாய்க்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*

*தசமி முற்பகல் 9.27 மணிவரை*

*புனர்பூசம் பின்னிரவு 2.39 மணிவரை*

*இராகுகாலம் 3.03-4.33 மணிவரை*

*சுபநேரம் 10.33-12.03 மணிவரை*

**மேடம்** அந்நியர் சந்திப்புண்டு.சவால்களை சமாளிக்கும் நாள்,உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முன்னேற்றமுண்டு.

**இடபம்** உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உறவினர்களால் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், செய்தொழிலில் விருத்தியுண்டு.

**கடகம்** தொலைபேசி செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக்குறைவுண்டு.

**சிங்கம்** தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், இல்லத்தில் சுப காரியங்கள் நிகழ்வதற்கான அறிகுறி தோன்றும், பதவியுயர்வுகள் பற்றிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, தொழிலில் அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, தந்தை வழியில் மனம் நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.

**விருச்சிகம்** ஆரோக்கிய குறைவான நாள். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும். போட்டியாக செயற்பட்ட நண்பர்கள் மனம் மாறுவர். பயணங்களால் பலனுண்டு. புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** மனதில் உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். போசன சுகமுண்டு.

**கும்பம்** புத்திரர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். சந்தித்தவர்களால் சந்தோசங்கள் ஏற்படலாம். பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் செலுத்துவீர்கள்.

**மீனம்** உடன்பிறப்புகளால் உற்சாகம் பெருகும் நாள். அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தொலைபேசி அழைப்புகளால் மகிழ்ச்சியடைவீர்கள். பொருட்சேர்க்கையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் பிறரிடம் கையேந்த தவறான தமிழ் தலைமைகளே காரணம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த கால தவறான அரசியல் தலைமைகளினால் தமிழ் மக்கள் பிறரிடம் கையேந்தும் சமூகமாக மாற்றப்பட்டு விட்டனர். அந்த நிலை தொடரக்கூடாது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் இந்த நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் மக்களை பாதித்துள்ளது. குறிப்பாக தமிழ் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு கடந்த கால தமிழ் தலைவர்களே முக்கிய காரணம். இவர்களினால் தமிழ் மக்கள் பிறரிடம் கையேந்தி வாழும் சமூகமாக மாற்றப்பட்டு விட்டது. இந்நிலையில் அரசாங்கம் இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகளைச் செய்து வருகின்றது. இந்த உதவிகள் மூலமாக எதிர்காலத்தில் பிறரிடம் கையேந்தும் நிலை ஏற்படக்கூடாது.

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் சுய தொழில் செய்து தமது வாழ்க்கையை முன்னேற்றக் கூடியதான உதவிகளாக அமைய வேண்டும். உதவிகளுக்காக காத்திருக்கும் சமூகமாக எதிர்காலத்தில் தமிழ் சமூகம் விளங்கக் கூடாது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உதவிகளை வழங்கும் திட்டங்களுக்கு பொறுப்பானவர்கள் இது விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலவச உதவிகளுக்காக கையேந்தும் நிலை மாற்றப்பட வேண்டும். அத்தோடு உதவிகளைப் பெறும் பயனாளிகளும் தொடர்ந்து அரசாங்கத்தினாலும் தொண்டு நிறுவனங்களினாலும் வழங்கப்படும் உதவிகளை எதிர்பார்த்து இருக்காமல் சொந்தத் தொழில் செய்து வாழ வேண்டும்.

தொழில் ஊக்குவிப்புக்கான உதவிகளை வழங்க திட்டங்களை முன்னெடுப்போர் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, யாழ்.மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்கள், ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப்பலர் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)




## ஒன்றரை இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளை

(கரவெட்டி)

வடமராட்சி கரணவாய் பகுதியில் வீட்டில் இருந்த ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்தின் அருகிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் வீட்டின் உரிமையாளர் வழிபடச் சென்ற சமயம் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வீட்டில் நுழைந்த திருடன் 2 சங்கிலி, காப்பு, பணம் என்பவற்றை கொள்ளையடித்து கொண்டு தப்பிச் சென்றுள்ளான்.

இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் சிலர் அவரைப்பிடிக்க முற்பட்ட போதும் குறித்த நபர் தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நபரைத்தேடி நெல்லியடி பொலிஸார் வலைவீசி தேடி வருகின்றனர். (அ-3-24)

## கால்நடைகளை பிடிக்க சாவ.பி.சபைக்கு அனுமதி

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மறவன்புலோ காலபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 1999 ஆம் ஆண்டு இப்பகுதி மக்களால் கைவிடப்பட்ட கால்நடைகளை பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட போதும் அவை வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கால்நடைகளை பிடிப்பதற்கான விசேட கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையினருக்கு கால்நடைகளை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கால்நடைகளை பிடித்து 3 நாட்களுக்குள் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை தலைவர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெண்ரின் மற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்கள், சம்மேளன நிர்வாக உறுப்பினர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-3-37)

## மின்னியலாளர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் மின்னியலாளர் பயிற்சிநெறிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறிக்கான கல்வித்தகைமைகளாக க.பொ.த் (உ/த) வரை கல்வி கற்றிருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி நெறியின் இறுதியில் NVQ சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிநெறியை கற்க விரும்புவர்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்ததிகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் என்பவற்றை உள்ளடக்கி சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து மாவட்ட முகாமையாளர், NAITA, இல 7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார்.

அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

## விவசாயிகளுக்கான ஆறுமாத தவணைக்கடன்

(சாவகச்சேரி)

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையினர் தமது எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு ஆறுமாத கால தவணைக்கடனை விவசாய சம்மேளனங்கள் ஊடாக வழங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக விண்ணப்பப் படிவங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் கல்வயல் விவசாய சம்மேளன பயனாளிகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கடன் உதவிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டுமென்றும் இதனுடன் தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்கு புத்தகம் என்பன எடுத்து வரப்பட வேண்டுமெனவும் கல்வயல் விவசாய சம்மேளன செயலாளர் கா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இக்கடன் பெறும் விவசாயிகள் தொடர்ந்து சிறுதொகையை சேமிப்பதன் மூலம் காப்புறுதித்திட்டத்தில் இணைத்து கொள்ளப்படவுள்ளதாகவும் அதன்மூலம் பல அரிய உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-3-29)

## குருநகர் உபபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவாகுவதில்லை

### ஒருங்கிணைப்பு கூட்டத்தில் மக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியிலுள்ள பொலிஸ் உப நிலையத்தில் முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்படுவதில்லை. அவ்வாறான நிலையம் அங்கு எதற்காக நிறுவப்பட்டது என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த போதே அப்பகுதி மக்கள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

இந்தப் பகுதியில் குற்றச் செயல்கள் எதுவும் நிகழ்ந்தால் மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு முறையிடச் சென்றால் இங்கு முறைப்பாடுகள் எதுவும் பதியப்படுவதில்லை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு அங்கு பணிபுரியும் பொலிஸார் கூறுகின்றனர்.

அப்படியானால் ஏன் அந்த இடத்தில் பொலிஸ் நிலையம். முறைப்பாடு பதிவு செய்யாத பொலிஸ் நிலையம் அங்கு இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன எனக் கேள்வி எழுப்பினர்.

இதுதவிர யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ய சென்ற பெண்ணொருவரிடம் கைத்தொலைபேசி இலக்கத்தை பெற்று இரவில் அவருக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொள்ளுகின்றனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதோடு குறித்த பெண்ணிடம் நான்கு மணித்தியாலத்திற்கு பின்பே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர். இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-6)

## இரத்ததான முகாம்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் உயிர்காக்கும் உன்னத பணியான இரத்த தான முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச செயலக பணியாளர்கள், ஊழியர்கள் இரத்ததானம் வழங்கவுள்ளனர்.

அத்துடன் குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் வழங்க விரும்பினால் இதில் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கலாம் என பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (அ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனம் , தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் ஆகியன இணைந்து நடத்திய சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் கற்கை நெறியை பூர்த்தி செய்த ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் வடமாகாண முகாமைத்துவ பணிப்பாளர் என்.கிருஷ்ணானந்தன், நன்னடத்தை ஆணையாளர் விஸ்வரூபன் ஆகியோர் அருகில் நிற்பதையும் விருந்தினர்களுடன் கற்கைநெறி யினை பூர்த்தி செய்து டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

# வாக்காளர்களுக்கு இலஞ்சத்தை வழங்கி தனக்கெதிரான எதிர்ப்பை அடக்கியது அரசு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தல் முடிபுகள் நியாய மான, பக்கச்சார்பற்ற முடிபுகள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரி வித்துள்ளார்.

தேர்தல் முடிபுகள் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் கட்சியின் தலைமைய கத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தனது விருப்பப்படி தெரிவு செய்த மூன்று மாகாணங்களுக்கே தேர் தலை நடத்தியது. அரசாங்கம் அரச வளங் கள், அதிகாரம் என்பவற்றை பயன்படுத்தி வாக்காளர்களுக்கு இலஞ்சம் மற்றும் பரிசு களை வழங்கி மக்கள் மத்தியில் இருக்கும் அரசாங்கத்திற்கான எதிர்ப்பை அடக்கிய துடன் உண்மையான விருப்பத்தை திரிபுபடு த்தியது. இந்தத் தேர்தல் முடிபுகளுக்கு பின் னர் கூட அரசாங்கத்திடம் இருந்து மக்களு க்கு எதுவும் கிடைக்க போவதில்லை.

தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கத்தை சேர்ந்தவர்களுக்கு வாகனங்கள் அமைச்சு பதவிகள் கிடைக்கும். ஆனால் மக்கள் நாளை முதல் தமது பிரச்சினைகளுடன் வாழ ஆரம் பிப்பர்.

கல்விக்கு கூடியளவு நிதி ஒதுக்கீடு, விவசா யிகளுக்கு நிவாரணம், பல்கலைக்கழக விரி வுரையாளர்களின் பிரச்சினைகள் உட்பட ஏனைய பிரச்சினைக்கு தீர்வோ, நிவாரணமோ கிடைக்காது.

இதனால் மக்கள் அரசாங்கத்திற்கு எதி ராக வீதியில் இறங்க வேண்டிய நிலைமை ஏற்படும். இந்த தேர்தல் முடிவுகளை கவனத் தில் கொள்ளாது மக்கள் தமது உரிமைகளு க்காக நடத்தும் போராட்டங்களுக்கு ஜே.வி.பி. தலைமையேற்கும்.

கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது ஜே.வி.பியின் வாக்குகள் குறைந்துள்ளன. கட்சிக்கு எதிரான சூழ்ச்சிகள் இதற்கு காரண மாக அமைந்தன. அதேபோல் பெரும் அதி காரத்தை கையில் வைத்து கொண்டு தேர்தல் நடத்தும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத சூழலும் இதற்கு அழுத்தங்களை ஏற்படுத்திய தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தமிழகம் செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி

தமிழகத்திற்கு பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளபோதும் அங்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் எண் ணிக்கை குறைவடையவில்லை என தெரி விக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழகத்திற்கு யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கை பிரஜைகள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு பயணங்களை மேற்கொ ள்ள வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப் பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த அறிவித்தலை அடுத்தும் தமிழகத்திற்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை என சென்னையிலுள்ள மகா போதி நிலையத்தின் தேரர் ஒருவரை மேற் கோள்காட்டி த ஹிந்து செய்தி வெளியிட் டுள்ளது.

கடந்த புதன்கிழமை சுமார் ஆயிரத்து 200 இலங்கை யாத்திரிகர்கள் சென்னை யிலுள்ள மகாபோதி நிலையத்திற்கு சென்றி ருந்ததாக கலவானே மகாநாம தேரர் த ஹிந்து பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். (அ-2)

# கிழக்கு முதலமைச்சர் பதவியை கூட்டமைப்பு விட்டுக் கொடுப்பது வரவேற்கத்தக்கது

## பிரபா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த மாகாண சபை தேர்த லிலே அரசாங்கம் அமோக வெற்றி பெற்றுள் ளது. அதேபோல் கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பினரும் அதிகளவிலான வாக்கு களைப் பெற்றிருக்கின்றார்கள்.

வாக்குகளைப் பெற்றவர்கள் மாகாண சபை மூலமாக மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரி வித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு,

தேர்தலுக்குப் பின்னர் இன்றும் யார் ஆட் சியமைப்பார்கள் என்பது கேள்விக்குரியா கவே உள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானி க்கும் சக்தியாக இன்று மாறியுள்ளது. கிழக்கு மாகாண ஆட்சியை தமிழ்க் கூட்டமைப்பினர் அமைத்தாலும் அமைக்காவிட்டாலும் கூட மக்களின் எதிர்பார்ப்பு அவர்கள் மீது அதிக மாக இருக்கக் கூடியதாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்ப தற்கு முஸ்லிம் காங்கிரஸிற்கு முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுப்பதற்கு தமிழ் கூட் டமைப்பினர் முன் வந்திருப்பது வரவேற் கத்தக்கதாகும். ஆனால் அதேபோல் விட்டுக் கொடுப்புடன் அரசாங்கத்துடன் பேச்சுவார் த்தை நடத்துவதற்கும் இவர்கள் முன்வர வேண்டும்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத் தாமல் ஒரு பிரச்சினைக்கான தீர்வை காண முடியாது. (அ-2)

Cambridge Management College

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக் French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.

மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப் புகளும் நடைபெறுகின்றன.

6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர் களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

# ஒயில் பூதம் போய் வாள் பூதம் வந்தது

(யாழ்ப்பாணம்)

கிறீஸ் பூதம், ஒயில் பூதம் போய் தற் போது வாள் பூதங்கள் வந்துள்ளன என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒரு ங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதி கரித்து விட்டதாகவும் கடந்த மூன்று மாத ங்களில் 500 வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தன.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் கிறி ஸ்பூதம் தொடர்பில் ஊடகங்கள் அதிகள வில் செய்தி வெளியிடப்பட்டிருந்தன. பின்பு ஒயில் பூதம், தற்போது வாள் கொண்டு திரியும் பூதங்கள் என்று சிரித்தபடி தெரி வித்தார். (அ-6)

மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 2
உயரம்:-5'4"
கி.பா:-10.25, 12 இல் செவ்.
தொழில்:-பிரான்ஸ் (P.R) இல்லை
B/337

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- அவிட்டம் 3
உயரம்: 5'5"
கி.பா:-36.25, 7 இல் செவ்.
தொழில்:-Bsc விரிவுரையாளர்
G/396

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- அத்தம் 2
உயரம்:-5'5"
கி.பா:-19.75
தொழில்:-திட்டப் பணிப்பாளர் தனியார் நிறுவனம்
B/392

பிறப்பு:- 1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- அவிட்டம் 4
உயரம்: 5'2"
கி.பா:-74, 8 இல் செவ்.
தொழில்:-சிக்கன கடன் சங்கம்
G/402

பிறப்பு:-1975 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-ஆயிலியம் 4
உயரம்:-5'8"
கி.பா:-32.75,7 இல் செவ்.
தொழில்:-Bcom நி.தி.உதவியாளர்
B/393

பிறப்பு:- 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பூரம் 1
உயரம்: 5'
கி.பா:-26.5
தொழில்:-பட்டதாரி ஆசிரியை
G/404

பிறப்பு:- 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-மிருகசீரிடம் 4
உயரம்:-5'6"
கி.பா:-30.5, 12 இல் செவ்.
தொழில்:-கனடா (P.R)
B/395

பிறப்பு:- 1986 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- ரோகினி 2
உயரம்: 5'5"
கி.பா:- 52, 8 இல் செவ்.
தொழில்:-Bsc. IT
G/419

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் தாக்குதல் விவகாரம்

# தேடப்பட்ட சந்தேக நபர்கள் 21 பேர் பொலிஸாரிடம் சரண்

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்கள் 41 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றைய தினம் இடம் பெற்ற போதே குறித்த சந்தேகநபர்கள் 41 பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ஆர்.எஸ். ஏ. திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரால் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட தோடு பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன.

இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 20 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலும் பலரை மன்னார் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் நேற்று முன்தினம் 11 பேரும் மேலதிக 10 சந்தேகநபர்களும் நேற்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

குறித்த 21 சந்தேகநபர்களிடம் முழுமையான வாக்குமூலத்தை பெற்றுக் கொண்ட மன்னார் பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, 41 சந்தேக நபர்களையும் இம்மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். சந்தேக நபர்கள் சார்பாக 3 சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், வைத்தியசாலை பணியாளர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் எனப் பலர் அடங்குவதாக தெரியவருகின்றது. (அ-2)

## ஜனாதிபதி 25 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருவார்

(கிளிநொச்சி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் கிளிநொச்சியில் நடைபெறும் மூன்று நிகழ்வுகளில் அவர் பங்கு கொள்ளவுள்ளார்.

இதில் ஜப்பான் நாட்டின் 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள லக்சபானா மின்சார நிலையத்தை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கும் நிகழ்விலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட பொது சந்தைக் கட்டடத் தொகுதி திறப்பு விழாவிலும் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்காக விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச உயரதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர். (அ-6)

# மு.காங்கிரஸுடன் கூட்டமைக்கும்போது வீண் அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடாது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாடு இன்று பொய்யாகிவிட்டது. அநாவசியமான அழுத்தங்களுக்கு அடிபணிந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் அரசாங்கம் கூட்டணிக்கு செல்லக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சூழ்ச்சிகள் மற்றும் பிரிவினைவாத சக்திகள் போன்ற பாரிய சவால்களை எதிர்கொண்டே அரசு தேர்தலை சந்தித்தது. இதில் பாரிய வெற்றியையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வெற்றியானது சர்வதேசத்திற்கான விசேட செய்தியாகக் கொள்ள முடியும்.

இலங்கைக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாரியளவிலான சவால்கள் காணப்பட்ட நிலையிலேயே கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் தேர்தல்கள் நடைபெற்றன.

கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் பூர்வீக நிலம், தாயகம் என்றெல்லாம் பிரிவினைவாத சக்திகள் பிரசாரம் செய்தன. ஆனால், இன்று அனைத்தும் பொய்யாகிவிட்டன.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும் தொகையானோர் தேர்தலில் வாக்களித்தனர்.

இவர்கள் ஆளும் மற்றும் எதிர்த்தரப்புகள் ஆதரித்ததுடன் பிரிவினைவாத கட்சிகளையும் ஆதரித்திருந்தனர். இது ஆபத்தான விடயமாகும்.

எனவே, அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் கூட்டணியமைக்கும் போது வீண் அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடாது.

தேர்தல் வெற்றியின் ஊடாக சர்வதேச நாடுகளுக்கு சிறந்த செய்தியினை இந்த நாட்டு மக்களும் கொடுத்துள்ளனர். பிரிவினைவாத கொள்கைகளுக்கு மக்கள் அனுமதி வழங்கவில்லை. அரசாங்கமும் இதனை புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

## பூநகரியிலும் மத்தியஸ்தர் சபை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் முதல் முறையாக மத்தியஸ்தர் சபையை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நடவடிக்கைக்காக நீதி அமைச்சில் இருந்து வருகை தந்த இரு உயர் அதிகாரிகளினாலும் பூநகரி பிரதேச செயலரி னாலும் கடந்த 5ஆம் திகதி நேர்முகப்பரீட்சை யொன்று நடத்தப்பட்டது. இந்நேர்முகப் பரீட்சைக்கு பூநகரிப் பகுதியில் உள்ள 19 கிராமசேவகர் பிரிவிலும் இருந்து 50 க்கு மேற் பட்டோர் தோற்றியிருந்தனர். (அ-84)

# நான்கு கிராமங்களுக்கு கிராமசேவகர்கள் இல்லை

## தேவைகளை பெறுவதில் மக்கள் சிரமம்

(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 4 கிராம சேவையாளர் பிரிவிற்கு கிராமசேவகர்கள் இன்மையால் தமது தேவைகளை உடனுக்குடன் பெறமுடியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் 20 கிராமங்கள் உள்ளன. இதில் பழைய முறிகண்டி, கோட்டை கட்டிய குளம், உயிலங்குளம், திருநகர் ஆகிய 4 கிராமங்களுக்கே கிராமசேவையாளர்கள் நியமிக்கப்படாத நிலையில் ஏனைய கிராம சேவையாளர்களே பதில் கடமை புரிகின்றனர்.

மேற்குறித்த 4 கிராமமக்களும் கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதும் இற்றை வரை நிரந்தரமான ஒரு கிராம சேவையாளர் இன்மையால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பதில் கடமை புரியும் கிராம சேவையாளர்களின் சேவையை ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே பெறமுடிகின்றது. ஏனைய நாட்களில் ஏற்படுகின்ற தேவையை யாரிடம் சென்று நிறைவேற்றுவது? உரிய தரப்பினர் இதற்கு பதில் கூறவேண்டும்.

எனவே, இக்குறைபாட்டை துரித கதியில் நிறைவேற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# மு.கா.வும் கூட்டமைப்பும் இணைந்தே கிழக்கில் ஆட்சியமைக்க வேண்டும்

## கை நழுவக்கூடாது என்கிறது ஐ.ம.முன்னணி

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபை ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தே ஏற்படுத்த வேண்டும். இது கை நழுவிப் போகுமானால் அது மன்னிக்க முடியாத வரலாற்றுக் குற்றமாக அமைந்துவிடும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், மேல் மாகாணசபை உறுப்பினருமான கலாநிதி ந. குமரகுருபரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிட்டுக்கு மாவும் தேங்காய்ப்பூவும் என்ற முஸ்லிம் தலைவர்களின உறவுக்கான கனவை முஸ்லிம் காங்கிரஸ் நனவாக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமியான கிழக்கு மாகாண ஆட்சியை தமிழ் பேசும் மக்களே கைப்பற்ற வேண்டும். இந்த வரலாற்றுக் கடமையினை தவறவிட முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் பங்களிப்பு செய்யலாகாது.

கிழக்கு மாகாணம் தமிழ்பேசும் மக்களிடமிருந்து பறிபோவதற்கு முஸ்லிம் காங்கிரஸோ, ஐ.தே.க.வோ பங்களிப்பு செய்யக் கூடாது என உரிமை பாராட்டி ஜனநாயக மக்கள் முன்னணி வலியுறுத்துகின்றது.

இது வரலாற்றுக் கடமையிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் நழுவிவிடாது என்பதே தமிழ் மக்களினதும் தலைவர்களினதும் நம்பிக்கையாகும்.

அதிகாரப் பரவலாக்கலில் நம்பிக்கை கொண்டுள்ள கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸுடன் ஐ.தே. க. வும் ஓரணியில் இணைய வேண்டும்.

இந்த அரசியல் சாணக்கியம் ஒரு வரலாற்றுத் தேவையாகும். இச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் அது மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறாகும் என்றார். (அ-2)



இலங்கை கள பறவையியல் குழு விலங்கியல்துறை கொழும்பு பல்கலைக்கழகத்தின் வழிகாட்டலின் கீழ் டில்மா கென்சவேசனின் அனுசரணையுடன் கல்வி அமைச்சு, தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் கோப்பாய் சிறுவர் மகிழ்வகம் இயற்கையின் வலிமையூடாக ஒருமைப்பாடு என்ற நிகழ்ச்சித் திட்டம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இயற்கை ஊக்குவிப்பு கழகத்தின் 60 பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 6 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களையும் வளவாளராகக் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர் சரத் கொட்டகம பயிற்சி தொடர்பாக விளக்கமளிப்பதையும் பயிற்சியில் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடைபெற்ற மாகாணங்களில் 15 ஆம் திகதிவரை கூட்டம் நடத்தத்தடை

## சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்த போதிலும் மூன்று மாகாண சபைகளிலும் ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் தடை விதிக்கப்பட்டிருப்பதாக தேர்தல்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய ஆகிய மூன்று மாகாண சபைகளிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் தேர்தலுக்கு பின்னரான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கென மூன்று மாகாணங்களையும் சேர்ந்த 108 பொலிஸ் நிலையங்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இக்காலப்பகுதிக்குள் வெற்றிக்களிப்பினை கொண்டாடும் வகையிலோ அல்லது எதிர்ப்பினை தெரிவித்தோ ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத்துவது சட்டத்தை மீறும் செயலாகும்.

சட்டத்தை அவமதித்து செயற்படுவோர் பாரபட்சமற்ற முறையில் கைது செய்யப்படுவர். இவர்களுக்கெதிராக வழங்கு தொடர முடிவதுடன் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்க முடியும்.

தேர்தல் முடிவடைந்ததை தொடர்ந்து பாரிய முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லையென சுட்டிக்காட்டிய அவர் இதுவரையில் மூன்று மாகாணங்களிலும் அமைதியான சூழ்நிலையே நிலவுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கைக்கு இரசாயன திரவியங்களை ஏற்றி வந்த கப்பலில் திடீர் தீ விபத்து

(கொழும்பு)

இலங்கைக்கு இரசாயன திரவியங்களை ஏற்றி வந்த கப்பல் ஒன்று இந்திய மும்பை கடற்கரை பகுதியில் திடீரென தீ விபத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயன பொருட்களை ஏற்றி ஆம்ஸ்டர்டாம் பாலம் அருகே நேற்று முன்தினம் மாலை சென்ற போது சரக்கு கப்பலில் திடீர் தீ ஏற்பட்டுள்ளது. பின்னர் தகவல் அறிந்து மும்பை கடலோரப்படை அதிகாரிகளின் இரண்டு கப்பல்கள் வந்து மீட்பு பணியில் ஈடுபட்டன.

நடந்த ஆய்வில் கப்பலின் இயந்திரப்பகுதி அருகே சத்தம் கேட்டதாக தெரிய வந்தது. கப்பலின் மத்திய பகுதியிலும் தீ பற்றி இருந்தது. பின்னர் தீயணைக்கப்பட்டது. அன்டிகுவா பார்புடா என கொடியிடப்பட்ட கப்பலே இவ்வாறு தீ விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இரசாயன திரவியங்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கப்பல் நேற்றையதினம் கொழும்பை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆஸி. செல்ல முயன்ற 17 பேர் கைதாகினர்

23 நாட்கள் கடல் பயணத்தின் பின்னர் நாடு திரும்பிய புகலிடக் கோரிக்கையாளர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்பியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

யால சரணாலயத்திற்கு அருகாமையில் வைத்து அமாதூவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை கைது செய்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி 32 பேர் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு பயணத்தை ஆரம்பித்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எனினும் இதில் 17 பேரை தற்போது கைது செய்துள்ளனர். இவர்களை அழைத்துச் செல்வதற்காக சென்றிருந்த ஏழு பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த புகலிடக்கோரிக்கையாளர்கள் யாலசரணாலயத்திற்கு அருகாமையில் தலைமறைவாக தங்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# பேஸ்புக்கின் ஊடாக அச்சுறுத்தல் விடுத்தவருக்கு டுபாயில் வழக்கு

(கொழும்பு)

பேஸ்புக் சமூக இணையத்தளத்தின் ஊடாக பெண் ஒருவரை அச்சுறுத்தியதாக இலங்கையர் ஒருவருக்கு எதிராக டுபாயில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் ஒருவரை பேஸ்புக்கின் ஊடாக அச்சுறுத்தியதாக குறித்த இலங்கையருக்கு எதிராக டுபாய் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

33 வயதான மின்சார தொழில்நுட்பவியலாளருக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காதலிக்க மறுத்த காரணத்தினால் இலங்கையர் தமக்கு எதிராக பேஸ்புக்கில் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக குறித்த பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

கொலை அச்சுறுத்தல் விடுத்தமை உண்மை எனவும் ஆயிரம் திர்ஹாம் பணம் பெற்றுக்கொண்டு மீள அளிக்கவில்லை எனவும் இதனால் தாம் குறித்த பெண்ணை எவ்வாறு கொலை செய்வது என்பது தொடர்பில் பேஸ்புக்கில் நண்பர்களின் கருத்துக்களைக் கோரியதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி குறித்த வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




★1297-ஸ்டேர்லிங் பாலம் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஸ்கொட்லாந்துப் படையினர் ஆங்கிலேயரைத் தோற்கடித்தனர்.

★1541-சிலியின் சண்டியாகோ நகரம் மிச்சிமாலென்கோ தலைமையிலான பழங்குடிகளினால் அழிக்கப்பட்டது.

★1609-ஹென்றி ஹட்சன் மான்ஹட்டன் தீவைக் கண்ணுற்றார்.

★1649-ஒலிவர் குறொம்வெல்லின் இங்கிலாந்து நாடாளுமன்றப் படைகள் அயர்லாந்தின் ட்ரொகேடா நகரைக் கைப்பற்றி ஆயிரக்கணக்கானோரைக் கொன்றன.

★1708-சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் மன்னன் தனது மொஸ்கோவின் மீதான படையெடுப்பை ஸ்மொலியென்ஸ்க் என்ற இடத்தில் இடைநிறுத்தினான். அவனது படைகள் 9 மாதங்களின் பின்னர் தோற்கடிக்கப்பட்டன.

★1709-பிரித்தானியா, நெதர்லாந்து, ஆஸ்திரியா ஆகியன பிரான்ஸ் மீது போர் தொடுத்தன.

★1802-பிரான்ஸ் சார்டீனியா பேரரசை இணைத்துக் கொண்டது.

★1857-யூட்டாவில் மெடோஸ் மலை படுகொலைகள் இடம்பெற்றன. நூற்றுக்கும் அதிகமான ஆர்கன்சஸ் குடியேற்றவாசிகள் உயிரிழந்தனர்.

★1889-யாழ்ப்பாணத்தில் இந்து சாதனம் (The Hindu Organ) என்ற ஆங்கிலப் பத்திரிகை டி.பி. செல்லப்பாபிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.

★1893- முதலாவது உலக சமய நாடாளுமன்ற மாநாடு சிக்காகோவில் ஆரம்பமானது.

★1897-எதியோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மன்னன் கஃபா இராச்சியத்தைக் கைப்பற்றினான்.

★1906-மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் என்ற சொற்பதத்தை தென்னாபிரிக்காவில் வன்முறையற்ற இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த ஆரம்பித்தார்.

★1914-அவுஸ்திரேலியா புதிய பிரித்தானியத் தீவினுள் நுழைந்து அங்கு நிலை கொண்டிருந்த ஜேர்மனியப் படைகளை வெளியேற்றினர்.

★1916-கனடாவின் கியூபெக் பாலத்தின் மத்திய பகுதி உடைந்து வீழ்ந்ததில் 11 பேர் உயிரிழந்தனர்.

★1919-ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் ஹொண்டுராசினுள் நுழைந்தனர்.

★1926-பெனிட்டோ முசோலினி மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.

★1940-இரண்டாம் உலகப் போர்: பக்கிங்ஹாம் அரண்மனை ஜேர்மனியினரின் வான் தாக்குதலில் சேதமடைந்தது.

★1944- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டார்ம்ஸ்டாட் நகரில் இடம்பெற்ற பிரித்தானியரின் குண்டு வீச்சில் 11 ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டனர்.

★1945- இரண்டாம் உலகப் போர்: போர்ணியோ தீவில் ஜப்பானியரினால் அடைக்கப்பட்டிருந்த போர்க் கைதிகளை அவுஸ்திரேலியப் படையினர் விடுவித்தனர். இவர்களில் பெண்கள் குழந்தைகள் உட்பட 2 ஆயிரம் பேர் செப்டெம்பர் 15 இல் கொல்லப்படவிருந்தனர்.

★1961- டெக்சாசை 4 ஆம் கட்ட சூறாவளி கார்லா தாக்கியது.

★1968- பிரான்சில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 95 பேர் உயிரிழந்தனர்.

★1973-சிலியின் மக்களாட்சி அரசு இராணுவப் புரட்சியில் கவிழ்க்கப்பட்டது. ஜனாதிபதி சல்வடோர் அலெண்டே உயிரிழந்தார். இராணுவப் தலைவர் ஆகுஸ்டோ பினொச்சே ஆட்சியைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சியை நடத்தினார்.

★1974-வட கரோலினாவில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 71 பேர் உயிரிழந்தனர்.

★1978-அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத், இஸ்ரேல் பிரதமர் பெகின் ஆகியோர் மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க காம்ப் டேவிட்டில் சந்தித்தனர்.

★1982-பாலஸ்தீன அகதிகளின் பாதுகாப்புக்கென வந்திருந்த பன்னாட்டுப் படைகள் பெய்ரூட் நகரை விட்டு அகன்றனர். ஐந்து நாட்களின் பின்னர் அங்கு பல்லாயிரக்கணக்கான அகதிகள் உயிரிழந்தனர்.

★1989- ஹங்கேரிக்கும் ஆஸ்திரியாவுக்குமான எல்லை திறந்து விடப்பட்டதில் ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மனி மக்கள் தப்பியோடினர்.

★1992-ஹவாய் தீவை சூறாவளி இனிக்கி தாக்கியதில் தீவு பலத்த சேதத்தைச் சந்தித்தது.

★1997- ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்கிய தனியான ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தை அமைக்க ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களித்தனர்.

★2001- வான் தாக்குதல்களில் உலக வர்த்தக மையம் எரிந்தது.

★2001- நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் மொத்தம் 2 ஆயிரத்து 974 பேர் உயிரிழந்தனர்.

★2006-ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1862- ஓ ஹென்றி, ஆங்கில எழுத்தாளர் (இ.1910)

★1917-பேர்டினண்ட் மார்க்கோஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (இ.1989)

### இறப்புக்கள்

★1921-சுப்பிரமணிய பாரதியார் (பி.1882)

★1948-முகம்மது அலி ஜின்னா, பாகிஸ்தான் ஸ்தாபகர்

★1957-இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலைவர் (பி.1924)

★1971-நிக்கிட்டா குருசேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (பி.1894)

★1973-சல்வடோர் அலெண்டே, சிலியின் ஜனாதிபதி (பி.1908)

★2009-யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர் (பி.1927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் பற்றிய சிந்தனைகள்

**சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உரையாற்றிய தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கட் டுரை பிரசுரமாகிறது.**

கொல்கத்தாவில் 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 அம் திகதி அவதரித்த சுவாமி விவேகானந்தர் நவம்பர் 1881 இல் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரை முதன் முதலாக சந்தித்தார். அவரோடு சுவாமிஜி தொடர்பு கொண்டிருந்தது 4 வருடங்கள் மட்டுமே. பகவான் ராமகிருஷ்ணரின் மறைவுக்கு பின்னர் 1890 ஆம் ஆண்டு தொடக்கம் 1893 ஆம் ஆண்டுவரை அவர் பரிவிரஜ சந்நியாசியாக இந்தியா முழுவதும் யாத்திரை செய்தார். பின்னர் சிக்காக்கோவில் நடந்த உலக சமய மகாநாட்டில் 1893 செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அன்று பங்கு பற்றிய சுவாமிஜி தமது 39 ஆம் வயதில் சமாதி அடையும் வரையில் புரிந்த சாதனைகளை இன்றும் நாம் போற்றியும் வாழ விளைந்தும் வருகின்றோம்.


மனித வரலாற்றில் மனித இயற்கைக்கு வேறுபட்ட குணமும் தன்மையும் பாவனையுடைய மகாத்மாக்களும் ஞானிகளும் அவதாரங்களும் பலமுறை தோன்றியுள்ளார்கள். இந்த நிகரற்ற ஆத்மாக்களின் நோக்கம் மிக அரிய மதிப்பும் முதன்மை உடையதுமானது. அது அவர்களின் வாக்கு, செயல்களிலும் பிரதிபலிக்கின்றது. அவர்கள் எங்கும் நிறைந்த உணர்வைப் பெற்றிருப்பதோடு உலகின் மீது புதுமையான வசீகர சக்தியை பரப்புகின்றார்கள். வாழ்க்கையில் குறுகிய நோக்கத்தோடு வாழும் மக்கள் இம் மகாத்மாக்களின் கம்பீர தோற்றத்தால் கவரப்பட்டுள்ளார்கள். எல்லாப் பிராணிகளிலும் உயிர்களிலும் இவர்கள் கொண்டுள்ள சம நோக்கும் சுய நலமின்மையுமே இவ் ஆத்ம வீரர்களின் வாழ்வின் அடிப்படை ஆகும். சுவாமிஜி இவ் உயர்ந்த கருத்துக்களுக்கு ஓர் இலக்கணமாக அமையப் பெற்றார்.

சுவாமிஜி அவர்கள் தமது அமெரிக்க விஜயத்தைத் தொடர்ந்து இந்தியாவிற்குத் திரும்புகையில் 15.01.1897 இல்- இலங்கையை வந்தடைந்தார். இங்கு 10 நாட்கள் தங்கிய காலத்தில் சுவாமிஜி 24.01.1897 இல் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவரின் வருகையை நினைவு கூருதல் இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும்.

சுவாமி விவேகானந்தர் இந்து மதத்திற்கு ஓர் தனித்துவமான அடையாளத்தைக் கொடுத்து இது பற்றிய ஓர் தெளிவான அடிப்படை விளக்கத்தையும் வழங்கியுள்ளார். சகல மத சிந்தனையாளர்களினதும் சமய பிரிவினரின் தத்துவங்களையும் ஏற்றுக் கொண்ட சுவாமிஜி சமயங்களின் வேறுபாடுகளுக்கிடையிலான ஒருமைப்பாட்டினையும் மதங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டினையும் வலியுறுத்தினார்.

**குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளில் உள்ள முக்கியமான எண்ணக்கருக்களை சுவாமிஜி விளக்கியுள்ளார்கள்.**

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியின் முடிவில் இந்து மதம் மேற்கத்தைய கிறிஸ்தவ மதப் போதனைகளுக்கும் அவ்வாழ்க்கை வழி நெறிகளுக்கும் ஈடு கொடுக்க வேண்டியதாயி



ருந்தது. இக்காலகட்டத்தில் மேற்கத்தைய கலாசாரத்தையும் இந்து கலாசாரத்தையும் ஒன்றிணைப்பதில் குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிந்தனைகள் மூலமாக சுவாமிஜி அளப்பரிய சேவை செய்தார்.

*மனிதனின் உண்மை சொரூபம், ஆத்மீகம் அதனை விகசிக்கச் செய்வதே வாழ்வின் இலட்சியம் என்பதே வலியுறுத்தல்

*உண்மை ஒன்றே உலகப் பொதுமறை என்பதை மக்களுக்கு உணரச் செய்வதன் மூலம் சமூகத்தை ஆத்மீக ரீதியில் விழிப்புற செய்தல்

*உயர்ந்த இலட்சியங்களையும் உன்னத சிந்தனைகளையும் கொண்ட ஒரு மகத்தான சமுதாயத்தை கட்டியெழுப்புதல்

* பற்றின்மை, தியாகம், தன்னலமற்ற சேவை ஆகிய இம்மூன்று பண்புகளின் அடிப்படையில் சமூகப் பணிபுரிதல்

*கடமைகளை,செய் பலனை பகவானுக்கு அர்ப்பணித்துவிடு என்ற தத்துவத்தின் அடிப்படையில் சேவையாற்றுதல்

*ஏழைகள்,.எளியவர்கள், துயருறுவோர் ஆகியோரிடத்தில் இறைவனைக் காண்பதே சிறந்த பிரார்த்தனை எனக் கொள்ளல்

* இக்கொள்கைகளின் அடிப்படையில் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி ஆன்மீக சக்தியை வளர்த்தல்

இச்சிந்தனைகளின் அடிப்படையில் காலத்தின் தேவைக்கேற்ப ராமகிருஷ்ண மிஷனை அமைத்தார்.

புராதன கோட்பாடுகளான துறவையும் கடவுள் தரிசனத்தையும் மனிதப் பணியுடன் இணைத்து நோக்கிய சுவாமிஜி சமூக சேவையை தெய்வீக சேவையாக கருதினார். இந்து தத்துவங்களின் எண்ணக்கருத்துக்களை ஆளுமை சார்ந்த தனது அனுபவங்களின் அடிப்படையில் மீளவடிவமைத்தார்.

ஒவ்வொரு உயிரும் தெய்வீகமானதென்றும் இவ்வித தரிசனமுடையவர்கள் உரிய காலத்தில் தோன்றியிருக்காவிடில் மனித வாழ்வு தடுமாற்றத்திற்கு தள்ளப்பட்டிருக்கும் என கூறியுள்ளார்.

மேலும் அவர்களின் அளவற்ற சக்தி, மனிதனின் மிருக உணர்ச்சிகளை அடக்கி பரஸ்பர நேயம், சாந்தி, நல்லெண்ணம் என்பவை உலகை ஏற்படுத்த வழியமைத்தது.

''முழு உலகிற்கும் ஒளியாய் இருக்கும் இந்து சமயத்தை சேர்ந்தவன் என்பதால் பூரிப்படைகிறேன்'' என பெருமையுடன் சிக்காக்கோவில் சிலாகித்த சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தை தனித்துவப்படுத்தி காட்டியதோடு "அதன் சகிப்பு தன்மையையும் சுய விமர்சன சுதந்திரமும்" என்ற அணுகுமுறை வித்தியாசமானதாம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அனைத்து மதங்களும் சமமானவையே என்பதை வலியுறுத்தி இந்து சமயம் உலகம் தழுவியதென்பதை ஐயத்திற்கு இடமின்றி சுவாமிஜி தெளிவாக்கினார். மேலும் "மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி" என்று கல்விக்கு வரைவிலக்கணம் தந்துள்ளார் சுவாமி விவேகானந்தர்.

ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றத்தை பெற வேண்டுமானால் சமய சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விழுமியங்களை நடைமுறை வாழ்க்கையின் பிரயோகத்திற்கு கொண்டுவர வேண்டும் என்ற எண்ணக்கரு சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையிலும் அவரது சமய ஆன்மீக கொள்கைகளிலும் அவரால் ஆக்கப்பட்ட நிறுவனங்களிலும் காணப்படுகின்றது.

சுவாமிஜி அவர்கள் நாம் எல்லாம் வல்ல கடவுளின் குழந்தைகள். நாம் எல்லையற்ற நெருப்பின் பொறிகள். நாம் எப்படி ஒன்றுமில்லாதவர்களாக ஆக முடியும்? எல்லாமே நாம் தாம் எதைச் செய்யவும் நாம் தயாராக இருக்கின்றோம். நம்மால் எதையும் செய்ய முடியும். மனிதன் எல்லாவற்றையும் செய்தாக வேண்டும். இத்தகைய நம்பிக்கை நம் முன்னோர்களின்இதயங்களில் இருந்தது. அவர்களிடம் இருந்த நம்பிக்கைதான் அடிப்படை சக்தியாக அவர்களை நாகரிகத்தின் அணிவகுப்பில் மேலும் மேலும் முன்னணியில் உந்தித்தள்ளியது என்கிறார்கள்.

விஞ்ஞான ரீதியில் சிறுவர்களும் உயர் மிருகவர்க்கங்களும் நல்லொழுக்க நற்குணம் சார்ந்துள்ளன என்பதை ஆய்வுகளின் மூலம் எடுத்துக்காட்டியதுடன் சமூக உணர்வுகளை உடைய மிருகங்கள் உள்ளுணர்வில் ஒழுக்கப் பண்புடையவையே. இதனால் மனித ஒழுக்க நெறியின் அடிப்படை தன்னுணர்வு ஆகும்.

தன்னுணர்வுடன் செயற்படுவது என்றால் ஆன்மா புத்தி விழித்தெழுந்த பின்னர் செயற்படுவதாகும். அதாவது புத்தியோகத்துடன் செயல்புரிவதை குறிப்பதாகும்.


**திரு.க.சிவலிங்கம்**
**(ஓய்வுபெற்ற திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்)**
**உரும்பிராய்**

ஆன்மாவின் உள்ளார்த்தமான மனிதனை பற்றிய நோக்கானது தெய்வீக தன்மையின் அடிப்படையில் ஒரு உயர்ந்த சிந்தனைக்கு இட்டுச் செல்கிறது. அது வாழ்க்கையை அர்த்தபூர்வமாக அமைத்து கொள்ள வழிவகுக்கிறது. இதன்மூலம் ஆன்மீக அடிப்படையில் மனித நேயத்திற்கு சுவாமிஜி வித்திட்டார். அறநெறியும் ஒழுக்கப்பாட்டிற்குமான புதிய சிந்தனைகளான தூய்மையே எமது தன்மை அல்லது ஆத்மா என்கிறார் சுவாமிஜி நாம் அயலவர்களை நேசிக்க வேண்டும். ஏனெனில் நாங்கள் அனைவருமே ஒரே பரம்பொருள் ஆவோம்.

சுவாமி விவேகானந்தர் இந்திய ஆன்மீக தத்துவங்களை கிழக்கிற்கும் மேற்கிற்குமான பாலத்தை போன்றதாக மக்களிடம் உணர வைத்தார். குறிப்பாக அவர் இந்து மத சாஸ்திரங்களையும் தத்துவங்கையும் அவர்களுக்கே உரித்தான பாணியில் விளக்கியுள்ளார். வீரத் துறவியான சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டில் அனைவருக்கும் குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குருவருளும் பரம்பொருளின் இளையருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

# கிழக்கின் ஆட்சியை தீர்மானிக்கும் பலம் எமது கையிலேயே உள்ளது

## அமைச்சர் ஹக்கீம் பெருமிதம்




(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை தீர்மானிக்கும் அதிகாரம் தமக்கே காணப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணத்தின் ஆட்சியை யார் நடத்த வேண்டும் என்பதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே நிர்ணயிக்கும். நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு ஆசனங்களை பெற்றுக்கொண்டது.

தேர்தலில் கட்சிக்கு ஆதரவளித்த தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி யாருக்கு ஆதரவளிப்பது என்பதனை தீர்மானிக்கவுள்ளோம். இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதனை அறிவிக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவின் ஊடாக ஜனாதிபதி தமது கட்சியுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்து வருகிறார்.

ஆட்சி அமைக்க ஆதரவளிக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சியும் கோரியுள்ளது. அச்சுறுத்தல் இன்றி தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் தமது கட்சி மேலும் அதிகளவான ஆசனங்களை வெற்றியீட்டியிருக்க கூடும். ஆளும் கட்சி அமைச்சரான அதாவுல்லாவும் அவரது ஆதரவாளர்களும் முஸ்லிம் காங்கிரஸிற்கு பல்வேறு வழிகளில் இடையூறு ஏற்படுத்தி வந்தனர். இந்த நடவடிக்கைகளுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கினர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஜே.வி.பியின் கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கவில்லை

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளை நாட்டு மக்கள் ஒதுக்கி தள்ளிவிட்டதையே இத்தேர்தல் முடிவுகள் மிகத்தெளிவாக சுட்டிக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்களை பிரமாண்டமான முறையில் நடத்தும் இக்கட்சி நடந்து முடிந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளது. மூன்று மாகாணங்களிலுமுள்ள ஏழு மாவட்டங்களிலும் தனித்துப்போட்டியிட்ட ஜே.வி.பி. 32 ஆயிரத்து 384 வாக்குகளை மாத்திரம் பெற்று ஒரே ஒரு ஆசனத்தை வெற்றி பெற்றிருக்கிறது.

இந்நாட்டின் மூன்றாவது பிரதான அரசியல் சக்தியாக கருதப்பட்ட ஜே.வி.பியை நாட்டு மக்கள் நிராகரித்து விட்டதையே இத்தேர்தல் முடிவு எடுத்துக் காட்டுகின்றது.

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் திகாமடுல்ல, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, அநுராதபுரம், கேகாலை இரத்தினபுரி ஆகிய ஏழு மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இத்தேர்தலில் அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் 16 ஆயிரத்து 66 வாக்குகளை பெற்றே ஜே.வி.பி ஒரு ஆசனத்தை பெற்றுள்ளது என அரசியல் அவதானிகள் கருத்துரைத்துள்ளனர். (அ-2)

# சிப்பாய் கைது

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவில் நெல்சன் சினிமா திரையரங்கத்திற்கு முன்னால் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத்தொலைபேசிகளை களவாடிய கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொள்ளைச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக திருகோணமலை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். களவாடப்பட்ட கையடக்கதொலைபேசிகளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

37


செங்கை ஆழியான்

# அக்கபோதி மன்னர்கள்


அக்கபோதி

மகாநாகன் மரணமடைந்ததும், உபராஜாவான அக்கபோதி (575-608) அரசனாகினான். எல்லா நற்பண்பு


முதலாம் அக்கபோதி மன்னன் நிர்மானித்த கிரிவிகாரை

களும் நிறைந்த மன்னனாக விளங்கினான். தனது தாய் மாமனை உபராஜாவாகவும், சகோதரியின் மகனை மலையகத்தின் யுவராஜாவாகவும் நியமித்தான். எல்லா அதிகாரிகளினதும் மனங்களை வெல்லக் கூடியதாகவும் திருப்திப் படுத்தக் கூடியதுமான பதவிகளை வழ்ங்கினான்.

அக்கபோதி மன்னன் கிரிவிகாரையைக் கட்டுவித்தான். மலையகத்தின் யுவராஜாவாக இருந்த தனது மருமகனுக்கு தனது ஒரு மகளான தத்தாவை மணம் முடித்துக்


அக்கபோதி மன்னன் நிர்மாணித்த மலிஹவிலா புத்தர் சிலை

கொடுத்தான். ஸ்ரீசங்கபோதியின் பெயரால் ஒரு பிரிவேனாவையும் அமைப்பித்தான். மகாசிவாவிற்காக இன்னொரு பிரிவேனாவையும் கட்டுவித்தான். அவனது ஆட்சிக் காலம் அமைதியும் சிறப்பும் பெற்றதாக விளங்கியது. சிங்கள மொழியில் கவிஞர்கள் பலர் பாக்கள் யாத்தளித்தனர்.

அம்பிலா பாசாவா விகாரை, உண்ணாவளி விகாரை, சுமணபர்வத விகாரை, ஹற்றிருக்கி விகாரை, முகசேனாபதி விகாரை, மகாநாக விகாரை முதலான பல விகாரைகளை அக்கபோதி கட்டுவித்தான். லோகபாசதாவை புனருத்தாரணம் செய்வித்தான். அபயகிரி விகாரைக்கு நிராடுவதற்கான குளம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தான். சேத்திய பர்வதவிகாரைக்கு நாக கொண்டிக் குளத்திலிருந்து நிரந்தரமான நீர்வசதி அமைத்து அளித்தான். மகாதூபிக்கு (ருவன்வெலி சாயா) தங்கக்குடையொன்றினை வழங்கினான். மகாகங்கையில் (மகாவலிகங்கை) மஹாமேகலா (மினிப்பே) என்றவிடத்தில் அணை கட்டி மணிகிரக்குளத்திற்கு (மின்னேரி) ஒரு கல்வாய் மூலம் நீர் வழங்கினான்.

அவனுடைய ஆட்சிக்காலத்தில் ஜோதிபாலா என்றொரு தேரர், வைதுல்யப் பிரிவினருடன் (மகாயானம்) சமயவாதம் புரிந்து வெற்றி பெற்றார். அதனால் மன்னன், அவருக்கென வசிப்பதற்கு விகாரைக்கு அருகில் ஒருமாளிகை அமைத்துக் கொடுத்து, மரியாதையும் செலுத்தினான் அக்கபோதி மன்னன். இவ்வாறான பல சமயப்பணிகளைச் செய்து முடித்து, முப்பத்திநான்காம் ஆட்சி வருடம் மரணமாயினான்.


இரண்டாம் அக்கபோதி மன்னன் புனருத்தாரணம் செய்த தூபராம சேத்திய விகாரை

அக்கபோதியின் ஆட்சியில் நாகதீவு


அக்கபோதியின் பின்னர் அரச கட்டிலேறியவன், அரசனின் சகோதரி மகனான இன்னொரு அக்கபோதி (2) ஆவான் (கி.பி 608- கி.பி 618) அவன் தனது தாய் மாமன் மகளான சம்ஹபத்தாவைத்தனது பட்டத்து மகரிஷியாக்கிக் கொண்டான். விருப்பு வெறுப்பின்றி தகுதிக்கேற்ப பதவிகளை வழங்கினான். வேலுவன விகாரை, ஜம்புத்ன கல்விகாரை, மற்றிகாபித்தி விகாரை என்பவற்றினை அமைப்பித்தான். அரச சபைத்தேரர் இறந்ததும், கலங்கிய மன்னன் அவர் நினைவாக சூளகல விகாரையை அமைப்பித்தான். ஒரு தடவை ஜோதிபாலா தேரர், தூமராம சேத்தியத்தின் முன் சில சமயச் சடங்குகள் செய்ய விரும்பி நிறைவேற்றியபோது, தூபராமசேத்தியக் கட்டடத்திலிருந்து ஒரு மிகச் சிறுபகுதி தகர்ந்து அவர் முன் விழுந்தது. தூபராமச்சேத்தியத்தின் பொறாமைக் குணம் கொண்ட தேரர், மன்னனை அழைத்து அதனைக் காட்டினார். மன்னன் மனம் கலங்கி தூபராம சேத்தியத்தை முழுமையாகப் புனருத்தாரணம் செய்து கொடுப்பதாக உறுதி அளித்தான்.

அதன்படி தூபராமசேத்தியத்தினைத் திருத்தும் பணி ஆரம்பமாகியது. அச்சேத்தியத்திலுள்ள புத்தரின் தோள்மூட்டு எலும்புப் புனித சின்னத்தை வெகுபாதுகாப்பாக லோகபாசாவுக்கு எடுத்துச் சென்று அங்கு வைத்துவிட்டு, தூபராமசேத்தியத்தின் புனருத்தாரணப் பணிகள் நடைபெற்றன. தூபராம சேத்தியத்தின் திருத்தப்பணிகள் சற்று தாமதமாகியபோது, தேரர்கள் அவன் கனவில் தோன்றி, "தூபராம சேத்தியத்தை மன்னன்; திருத்துவதற்கு மனங்கொள்ளானாகில், புத்தரின் புனித சின்னங்களை வேறிடத்திற்கு எடுத்துச் செல்வோம்" என்றனர். மன்னன் விழிப்படைந்து திருத்தப் பணிகளை விரைந்து நிறைவேற்றினான். புதுப்பொலிவோடு உருவாக்கினான். லோகபாசாடாவிலிருந்து புனித சின்னத்தை ஊர்வலமாகப் பெருந்திருவிழாவாக எடுத்து வந்து தூபராமசேத்தியத்தில் தாபித்தான். அப்பெரஹர ஊர்வலத்தில் ஜோதிபாலா தேரர் பிக்குகள், மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

2 ஆம் அக்கபோதி என்ற அனுராதபுரத்து மன்னன் யாழ்ப்பாணத்திலிருந்த உண்ணலொமகாக்கோயில் என்ற நிறுவனத்தை ராஜாயதனதாது என்ற விகாரைக்குக் கட்டிக் கொடுத்தான் எனவும், அங்கிருந்த அமலதேசிய என்ற சைத்தியத்திற்கு ஒரு குடையைத் தானமாக வழங்கினான் எனவும் சூளவம்சத்தின் மூலம் அறிவதாக கா.இந்திரபாலா கூறிகிறார். அக்கபோதி, நாகதீபத்தில் இராஜயதனதாது விகாரையைக் கட்டுவித்ததோடு, அமலசேத்தியத்திற்கு ஒரு குடையையும் வழங்கினான் என்பதிலிருந்து, அவன் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அக்கபோதியின் ஆட்சி நிலவியதை அறிய முடிகின்றது.

அக்கபோதியின் ஆட்சிக்காலத்தில் கலிங்கநாட்டு இளவரசன் ஒருவன், அங்கு நடைபெற்ற யுத்தத்தின்போது அவமே மரணமானவர்களைக் கண்டு மனம் குழப்பமடைந்து இலங்கைக்கு வந்து பிக்குவாக இணைந்து கொண்டான். இவனுக்கு பௌத்த தர்மத்தைப் போதித்து துறவியாக்கியவர் ஜோதிபாலாதேரர் ஆவர். கலிங்க இளவரசனைத் தொடர்ந்து அவனது மனைவியும், அமைச்சரும் இலங்கைக்கு வந்து சங்கத்தில் இணைந்தனர்.


அக்கபோதியின் பட்டத்துராணியும் சமயப்பணிகள் பல செய்தாள். கபல நாகவிகாரையை அவனே கட்டுவித்தான். அக்கபோதி தனது காலத்தில் கங்காதடவாவி (கந்தளாய்) கிரித் தலைவாவி, வாகல்கஹாவாவி என்பனவற்றினை அமைத்து நீர்ப்பாசன வசதி செய்துகொடுத்தான். ஆட்சியின் பத்தாவது வருடம் அக்கபோதி மரணமடைந்தான். (தொடரும்)


இரண்டாம் அக்கபோதி மன்னன்அமைத்துக் கொடுத்த கந்தளாய் நீர்ப்பாசனக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியில்லாது இருந்தாலும் அது ஓர் உள பிரச்சினைக்கான அறிகுறியாகும்

உளவியல் காரணங்களால் பசியின்மை ஏற்படுவதை ஆங்கிலத்தில் "**Anorexia nervosa**" என்கிறார்கள். இந்நோயுற்றவருக்கு எங்கே உடல் பருத்து மிகவும் குண்டாகி விடுவோமோ என்ற இயல்புக்கு மாறான பயம் நாளுக்கு நாள் வளரும். உடலும் பார்க்க அழகின்றி மிகவும் உருக்குலைந்து காணப்படும். அவரது மனதுக்கு அவர் மிகவும் குண்டாக இருப்பதாக தோன்றும். உண்



மையில் அப்படியிராது. எனவே, அவர் ஏற்கனவே எலும்பும் தோலுமாக ஆகிவிட்ட நிலையிலும் மேலும் உடல் எடைக் குறைப்பில் ஈடுபடுவார்.

ஆரம்ப நிலையில் உண்மையான பசியின்மை ஏற்படுவதில்லை. பசி அதிகமானாலும் அந்நபர் உடல் எடையைக் குறைக்கும் நோக்கத்தோடு பட்டினி கிடப்பார். சில வித்தியாச நோயுள்ளவர் அளவுக்குமீறிய உடல் எடையிழப்பின் பக்க விளைவுகளின் காரணமாக இறக்கவும் நேரிடுவதுண்டு.

இந்நோயால் துன்புறுவோர் பெரும்பாலும் 13 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட பெண்கள்தான் என்றாலும் வயது வந்த பெண்களிலும் பலர் இதனால் துன்புறுவதுண்டு. ஆனால், ஆண்கள் அநேகமாக இதனால் பாதிக்கப்படுவதில்லை எனலாம்.

இந்நோயாளி புத்திசாலியாகவும் கீழ்ப் படிதலும் எல்லோருடனும் இணக்கமாகப் பழகும் பண்பு உள்ளவராகவும் காணப்படுவார். அப்படியிருந்தாலும் சமூகத்தோடு ஒன்றி வாழ்வதில் தயக்கம் காட்டுவார். அவரது பாலியல் மனோபாவமும் உடல் வளர்ச்சியும் பெருமளவு பின் தங்கிய நிலையில் இருக்கும்.

அநேகமாக எல்லா விடயங்களிலும் கை சுத்தமானவராகவும் எதிலும் முழுமையைக் கடைப்பிடிப்பவராகவும் பெருஞ்சாதனையாளராகவும் இருப்பார். போட்டி மனப்பான்மை மிகுதியாக இருக்கும். வகுப்பில் தன் உடன் கற்போரை விட அல்லது உடனிருப்போரை விட மிக அழகிய மெல்லிய உடல் வாகை பெற மிகவும் முயல்வார். அவரது அதிகபடியான உடல் எடை இழப்பினால் உடல்வாகு மிகவும் உருக்குலைந்து போய்விடும்.

இந்நோயுற்றோர் அநேகமாக நடுத்தர மக்கள் குழுவில் பெரும்பாலும் இனம் காணப்படுவார்கள். இவரது குடும்ப நிலை பொருளாதாரத்தில் ஒரு திருப்தியான எல்லையை அடைந்திருக்கும் என்றாலும் உண்மையில் குடும்ப உறுப்பினர்களிடையே போராட்டம் ஆழமாக வேர்விட்டிருக்கும். குடும்ப உறுப்பினர்களில்ஒருவர் அதிக உடல் எடையுடன் குண்டாக இருப்பதுண்டு.

பசியின்மை நோயுற்றவர் உருளைக்கிழங்குகள், பாண் மற்றும் தானிய உணவு வகைகளை உண்ண மறுப்பார். ஏனைய உணவுகளை வெறுமனே கொறிப்பார். எப்போதும் தனிமையில் சாப்பிடவே விரும்புவார் அல்லது உணவை ஒளித்து வைத்துக்கொள்வார். அவர் உணவை ஏற்கனவே உண்டு விட்டதாக எண்ணும்படி பெற்றோருக்குப் காட்டுவார். கோப்பி போன்ற பானங்களை அருந்தும் பழக்கம் உள்ளவர்களாகவும் அது பசியுணர்வைக் குறைக்கக்கூடியது என்றும் ஆற்றலை உடலுக்கு வழங்கக்கூடியது என்றும் எண்ணிக் கொண்டு அவைகளை அளவுக்கு மீறி அதிக அளவில் குடிப்பார்.

பசியின்மை நோயுடையவர் உடல் எடை குறைப்பு செயற்பாடுகளில் இயல்புக்கு மாறான விதத்தில் ஈடுபாடு உள்ளவராகக் காணப்படுவார். உடல் வற்றி எலும்பும் தோலுமாக இருப்பதுடன் இரத்தச் சோகை, இரத்த அழுத்தக்குறைவு, உறங்குவதில் தொல்லைகள், மெலிந்த, உலர்ந்த அல்லது வெடித்த தலை முடிகளும் காணப்படுவது பசியின்மை நோயின் முக்கியமான பண்புகள். மேலும் மாதவிடாய் நின்று விடும் அநேகமாக போதுமான உடல் நிறை போட்ட ஓராண்டுக்குப் பின்னர்தான் மாதவிலக்குத் தோன்றும். இப்படிப்பட்ட நிலை நிரந்தரமான மலட்டுத்தன்மைக்கு வழி வகுப்பதுண்டு.


இது பசியின்மை நோயுடன் தொடர்புடையதுதான். இந்நோயுற்றவர் அநேகமாக சற்று வயதானவராகவும் இவரது உடல் நிலை கிட்டத்தட்ட இயல்பானதாகவும் இருக்கும். இந்நோயுற்றவர் தனிமை உணர்வை எய்தும் போதும் சோர்வு நிலையை அடைந்த போதும் அடிக்கடி எதையாவது சாப்பிடுவார்கள். பின்னர் குற்றவுணர்வு தோன்றினால் உண்டது அனைத்தையும் (சத்தி- **Vomit**) வெளியே எடுத்து விட முற்படுவார். சத்தியெடுக்கும் செயலை தன் உடல் எடையைக் கட்டுப்பாடோடு வைத்துக்கொள்வதற்காக பயன்படுத்துவார்.

அமிலச் சுரப்பு மிக்க சத்தியை அடிக்கடி எடுப்பதன் காரணமாக அவரது பற்கள் சேதமடையும். தொண்டையிலும் உணவுக்குழாயிலும் அழற்சி உண்டாகும். இன்னொரு வகையினர் வாந்தி எடுப்பதற்குப் பதிலாக பெருமளவில் மலமிளக்கிகளை எடுப்பதுண்டு. உண்ட உணவின் பிடியிலிருந்து விடுபட இப்படியும் ஒரு வழி. இந்தப் பழக்கத்தினால் குதப்பகுதியில் இரத்தவொழுக்கு உண்டாகும். வாந்தியெடுப்பதும் மலமிளக்கிகளை உட்கொள்வதும் இரண்டையுமே செய்பவர்களுமுண்டு. இதனால் இவர்கள் விரும்பியதை அடைய முடிகிறது. எனினும் உடல் நலம்




நாளடைவில் கெடும் என்பதை இவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

உளவியல் தோற்றமூலத்துடன் கூடிய உடல் சார்ந்த நலக்கேடாக இது இருந்த போதிலும் தாய்மார்கள் இப்பசியின்மை நோயினைத் தடுக்க உதவி செய்ய முடியும். சிறு



பிள்ளைகள், குறிப்பாக பெண் பிள்ளைகள் போதுமான அளவு சத்துக்கள் அடங்கிய உணவுகளை உண்ணவும் போதிய உடற்பயிற்சிகளிலும் பொழுதுபோக்குகளிலும் ஈடுபடவும் வேண்டும் என்று கற்பிக்கப்பட வேண்டும். இவை யாவும் ஓர் ஆரோக்கியமான மனதிற்கும் உடலுக்கும் மிக அவசியமானவை என்று அவர்கள் உணர வேண்டும். பருமன் குறைந்த உடல்வாகிற்கு மிக உயர்வான இடமளிப்பதையும் பாராட்டிப் பேசுதலையும் தவிர்க்க வேண்டும்.

மேலும் உடல் எடையை விரைவாகக் குறைப்பதற்குச் சத்தற்ற உணவுகளைப் பரிந்துரைப்பதையும் தவிர்க்க வேண்டும். தாய்மார்கள் தங்களது பெண்பிள்ளைகளின் உணவுப்பழக்கங்கள் இயல்புக்கு மாறானவையாக அல்லது பெண்பிள்ளைகளின் நடவடிக்கைகள் திடீரென்று அளவுக்குமீறிய உடல் எடை இழப்பில் கொண்டு போய் நிறுத்துபவையாக இருந்தால் உடன


கலாநிதி க.கஜவிந்தன்
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்,
மெய்யியல்/உளவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


டியாக குடும்ப மருத்துவரிடம் சென்று கலந்து ஆலோசிக்க வேண்டும்.

அதிக பசியின்மை நோயுற்றோரின் மேல்தோல் வரட்சியுடனும் ஓரளவு மஞ்சள் நிறத்துடனும் காணப்படும். கைகளிலும் முதுகு, வயிறு மற்றும் மேற்கால் பகுதிகளிலும் சில சமயம் மெல்லிய உரோமங்கள் மூடி இருக்கும். இந்நோயுற்ற பெண்ணின் உடல் எடை 30 கிலோவிற்கும் கீழ் சென்று விடும்போது நிரந்தரமான மூளைச் சேதம் ஏற்படுவதோடு நடைபிணம் மாதிரி எதற்கும் தகுதியற்றவராக மாறி இறுதியில் இறக்கவும் நேரிடும். மருத்துவமனையில் சேர்த்து அன்பான மருத்துவக்குழுவினராலும் உளவியல் மருத்துவ நிபுணராலும் ஓர் ஊட்ட உணவு நிபுணராலும் கனிவான சிகிச்சை அளிக்கப் பட்டால் நலம்பெற்று எழக்கூடிய சாத்தியமுண்டு.

மருத்துவ மனையில் சேர்ப்பதால் நோயுற்றவர் விரும்பிய குடும்பத்தினரை குடும்பச் சூழலைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கேற்ப சூழல் அமைவதுடன் தேவையான உடல் வடிவத்தை அடையப் போதுமான உதவி அங்கே கிட்டுகிறது. மேலும் குடும்பத்தின் மற்றவர்களுக்கும் இதன் பின்னணிக் காரணம் இன்னது என்று அறிந்து அதனால் உண்டான சிக்கல்களை விடுவிக்க போதிய நேரம் கிடைக்கிறது. சிகிச்சை அளிப்பதில் ஏற்படும் காலதாமதம் எத்தனை நீண்டதாக உள்ளதோ அந்த அளவுக்கு குணமடைதல் சிக்கலானதாக ஆகும்.

# மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் மீது தீவிர கண்காணிப்பு

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைத் தேடி பொலிஸார் நேற்று முதல் தீவிர வலைவீச்சில் ஈடுபட தீர்மானித்துள்ளனர். இது குறித்து போக்குவரத்துப் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னர் அதிகமாக இரவு நேரங்களிலேயே சாரதிகள் சோதனை செய்யப்பட்டதாகவும் ஆனால், இனி 24 மணி நேரமும் சோதனை செய்யப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிபோதையில் வாகனம் செலுத்தி பொலிஸாரிடம் அகப்பட்டு வழக்குத் தாக்கல் செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் 151 ஆவது அத்தியாயத்தின் 216 ஆவது சரத்தின்படி பின்வரும் தண்டனைகள் வழங்கப்படும்.

குடிபோதையில் வாகனம் செலுத்தினால் 2 ஆயிரம் ரூபா அபராதம், 3 மாத சிறை தண்டனை, ஒரு வருடத்திற்கான சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும்.

குடிபோதையில் பயணிகளுடன் வாகனம் செலுத்தினால் 3 ஆயிரம் ரூபா அபராதம், 6 மாத சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய் யப்படும்.

குடிபோதையில் வாகனம் செலுத்தி ஒருவருக்கு காயம் ஏற்படுத்தினால் 5 ஆயிரம் ரூபா அபராதம், 5 வருட சிறை, சாரதி அனுமதிப் பத்திம் இரத்தாகும்.

குடிபோதையில் வாகனம் செலுத்தி ஒருவருக்கு உயிர்ச்சேதம் ஏற்படுத்தினால் 10 வருட சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும். மேலும் குடிபோதையில் வாகனம் செலுத்தினால் வாகனத்தின் உரிமையாளர் மீதும் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளும் உண்டு. (அ-2)

# என்னை வீழ்த்த நினைத்த கூட்டமைப்புக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பித்துள்ளனர்

## பிள்ளையான் தெரிவிப்பு

(கொழும்பு)

என்னை வீழ்த்த நினைத்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர் என முன்னாள் முதலமைச்சரும் கிழக்கு மாகாண சபையின் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்னை எந்தவிதத்திலாவது தோற்கடிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு பல முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அப்படியிருந்தும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிகளவான வாக்குகளைப் பெற்று நான் வெற்றி பெற்றுள்ளேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. தொடர்ந்து இதேபோன்று பல இடர்பாடுகளை ஏற்படுத்த காத்திருக்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப் புத் தொடர்பில் கிழக்கு மக்கள் மிக்க அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தின் நான்காவது தூணை தூக்கிநிறுத்தியவர் பாரதி

## இன்று பாரதியாரின் நினைவுதினம்



சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்,
பொதுச்செயலாளர், யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம்

பாரதியை ஒரு கவிஞனாக எல்லோரும் அறிவோம். கவிதையில் முத்திரையை பதித்தது போல உரைநடையிலும் தனக்கென ஒரு நடையை வகுத்து கொண்டு பெரும் சாதனைகளை அவர் புரிந்திருக்கிறார். அவரது வசனநடை இனிமையானது, தெளிவானது, ஆற்றொழுக்கானது. கவிதையை போலவே வசன நடையிலும் தேவையில்லாத சொல்லை அவர் பயன்படுத்தியது கிடையாது.

பாரதியை நன்கு கற்றவர்கள் அவரது வாழ்க்கை வரலாற்றை முழுவதும் தெரிந்தவர்கள். பாரதி ஒரு பத்திரிகையாளன் என்றே குறிப்பிடுகிறார்கள். அவரது கவிதைகளை, கட்டுரைகளை படிக்கிற போது அது உண்மை தான் என்று நமக்கு தோன்றும். பத்திரிகையாளனாக அவர் காட்டிச் சென்ற வழியானது தெரிந்த நேர்மைத்திறன் கொண்ட வழியாகும்.

நமது அரசியல் சட்டம் மூன்று பிரிவுகளை கொண்டது. நீதித்துறை, அரசியல் துறை, நிர்வாகத்துறை என்பன அவை. இந்த மூன்று தூண்களின் மீது தான் நமது நாட்டின் ஜனநாயகம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஜனநாயகத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கும் நான்காவது தூண் பத்திரிகைத் துறையாகும். இந்த துறைகள் தடம் மாறிப் போய்விடாமல் கண்காணித்து அரசியல் அமைப்புச்சட்டத்தில் இல்லாவிடினும் மக்கள் மனதிற்கு உண்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு பத்திரிகைத்துறைக்கு இருப்பதால் பத்திரிகைத்துறை நான்காம் தூண் ஆகும்.

எவரும் நுழையமுடியாத இடத்தில் பத்திரிகை நிருபர் நுழையலாம். எந்தப் பொறுப்பில் உள்ளவரையும் உரிமையுடன் எந்தக் கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம். எந்தக் கலவரம் நடக்கும் இடத்திலும் நிருபர்கள் என்றால் ஒரு தனிமரியாதை தருவார்கள். இதற்கு முரணாக ஏதாவது நடந்து விட்டால் பத்திரிகைச் சுதந்திரம் பறிபோய்விட்டது என்று குரல் எழும்.

பரபரப்புக்காக எழுதுவது கேள்விப்பட்ட செய்தியை இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டே நேரில் பார்த்தது போல் எழுதுவது, அதில் தங்கள் கற்பனையை கொஞ்சம் கலந்து எழுதுவது, வணிகத்தை முதல் நோக்கமாக கொண்டு எழுதுவது, சமூகத்தில் இவை ஏற்படுத்தும் பாதிப்புக்களையும் விளைவுகளைப் பற்றியும் எண்ணாமல் எழுதுவது போன்றவை மலிந்து விடுமானால் நான்காம் தூண் நசிந்து போவது மட்டுமல்லாமல் முதல் மூன்று தூண்களும் கேட்பாரற்று போய் விடும். ஒரு பத்திரிகையாளனாக விளங்கிய பாரதியின் நேர்மையும் துணிவும் அத்துறைக்கு பெரும் அணிகலன்களாக விளங்கி பெருமை சேர்க்கின்றன. பத்திரிகைகளை வணிக நோக்குடன் அவர் நடத்தவில்லை. குறிப்பாக பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் உரிய செய்திகளை தர வேண்டும் என்பது அவர் நோக்கமாக இருந்தது.

தெளிவான நடையில் மக்களுக்கு புரியுமாறு எழுத வேண்டும் என்பதும் இலக்கண பிழை, எழுத்துப்பழை இல்லாமல் பத்திரிகை வரவேண்டும் என்பதும் பாரதியின் விருப்பமாக இருந்தது. பத்திரிகையில் வரும் செய்திகளின் தரம் பற்றி பாரதி தனது கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார்.

"இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் ஐரோப்பிய, அமெரிக்க பத்திரிகைகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் பலஉள". விஸ்தரமான செய்தி எல்லை. ரஸமாக சொல்லும் திறமை இவற்றில் இந்தியாவிலுள்ள பத்திரிகைகளை காட்டிலும் மேற்றிசை பத்திரிகைகள் மிக உயர்ந்த நிலையிலிருக்கின்றன. கடிதங்கள் எழுதுவோரில் பலர் இலக்கண பயிற்சி கூட இல்லாமல் பத்திரிகைக்கு எழுதத் துணிகிறார்கள். இவற்றை பத்திராதிபர்கள் சில சமயங்களில் பிழைகளையாமலே பிரசுரம் செய்து விடுகிறார்கள். இதுவுமன்றி இலக்கணப் பயிற்சியற்ற சிலர் பத்திராதிபராக இருக்கும் விநோதத்தையும் இந்த நாட்டிலே காண்கின்றோம். நவீன நாகரிகத்தின் முக்கிய சின்னங்களிலொன்றாகிய பத்திரிகைத்தொழிலில் நாம் மேன்மை பெற வேண்டுமானால் மேற்கூறப்பட்ட பிழைகளை தீர்த்துக் கொள்ள கடவோம்"

1882 ஆம் ஆண்டு தோன்றிய பாரதி தனது 19 ஆம் வயதிற்குள்ளேயே எட்டயபுரம் ஜமீனில் தனது திறமைகளை வெளிப்படுத்தி பாரதி என்ற பட்டத்தை பெற்றிருந்தார். அவரிடமிருந்த எழுதுகோல் இளமையிலேயே பண்பட்டிருந்தது. எவருக்கும் கட்டுப்படும் சுபாவம் பாரதியிடம் இல்லை. பாரதி இரண்டு மாதங்கள் பத்து நாட்கள் ஆசிரியராக கடமையாற்றினார்.

பத்திரிகைதுறையில் பணியாற்றும் வாய்புத்தான். அவர் ஆசிரியர் பணியை கைவிட காரணமாக அமைந்தது. சென்னையிலிருந்து வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகையில் பணியாற்ற தொடங்கிய அவர் சக்கரவர்த்தினி, இந்தியா போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். தனது 39 ஆவது வயதில் இறையடியெய்தும் வரையில் பாரதி பத்திரிகையாளனாகவே வாழ்ந்தார்.

பாரதி காட்டிய வழியில் பத்திரிகைகள் கருத்துக்களை வெளியிட்டு நான்காம் தூணாக செயற்பட வேண்டும் என்பது அடியேன் கருத்தாகும்.

# தேர்தல் வெற்றி; அபிவிருத்தி நடவடிக்கைக்கு உந்துசக்தி

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

ஜனநாயகத்தைப் பலப்படுத்தி அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் இம்முறை தேர்தல் வெற்றி மேலும் உந்துசக்தியாக அமைந்திருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தல் வெற்றி குறித்து நன்றி தெரிவித்து ஜனாதிபதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த விசேட செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இந்த கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றி பெற்றுள்ளது.

இந்தத் தேர்தலை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்தி சிறந்த ஒரு மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களத்திற்கும் ஆளும் எதிர்க்கட்சி சகல வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு தரப்பினருக்கும் விசேடமாக இந்த மாகாணங்களை சேர்ந்த சகல பொது மக்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வுகளை இந்தத் தேர்தல் தெளிவாக வெளிப்படுத்தியது. எனது தலைமையில் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வரும் தேர்தலில் 10 ஆவது வெற்றியான இந்தத் தேர்தல் இலங்கையின் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.

தேசிய மக்கள் கருத்துக்கணிப்பாக இம்முறை நடைபெற்ற இந்தத் தேர்தல் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

ஜனநாயகத்தை பலப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட எமது அபிவிருத்தி வேலைத்திட்டத்தை எதிர்காலத்தில் மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்ல பலம் கிடைத்துள்ளது.

அதேபோன்று இன, மத, குல பேதங்களை காரண்பித்து வெற்றியை எதிர்பார்த்திருந்த அனைத்து சக்திகளையும் தோல்வியடையச் செய்து இலங்கையில் தேசம் மற்றும் அரசின் மீது நம்பிக்கை வைத்த மக்கள் தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஒரு இலக்கை நோக்கி வெற்றிகரமாக நெருங்கக்கூடியதாக இருப்பது வெற்றியாளரை போன்று தோல்வியாளரும் இணைகின்ற போதே ஆகும். எனவே நாடு எதிர்நோக்கும் சவால்களின் போது பொறுப்புடனும் ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# உறுப்பினர்களின் பெயர்கள் இந்த வார இறுதிக்குள் தேர்தல் செயலகம்

(கொழும்பு)

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை இந்த வாரத்திற்குள் வர்த்தமானியில் வெளியிட உத்தேசித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர்களின் தகவல்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைத்து வருவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மூன்று மாகாண சபைகளுக்கும் தெரிவான அனைத்து உறுப்பினர்களினதும் விபரங்கள் கிடைத்தவுடன் பெயர்ப்பட்டியலை வர்த்தமானியில் அறிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கலாசார விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் கலை, கலாசார விழாவும் பூந்துணர் சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 24 ஆம் திகதி பூநகரி வாடியடி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த வாரம் பூநகரி பிரதேச செயலகத்தில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற கலாசாரப் பேரவைக்கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# ரயிலுடன் கார் மோதி நால்வர் படுகாயம்

(கொழும்பு)

கிரியல்ல படகம பகுதி புகையிரத கடவை ஒன்றில் கார் ஒன்று விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த புகையிர்த கடவையில் அபாய விளக்கு ஒளிரவிடப்பட்டிருந்த போதும் படகம வழியாக நீர்கொழும்பு வீதிக்குள் பயணிக்க முயற்சித்த கார் அவிசாவளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த காரினை பெண் ஒருவரே செலுத்திச்சென்றதாகவும் அதில் பெண்ணின் கணவர், தாய், மகள் மற்றும் சகோதரி ஆகியோர் பயணித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

விபத்தில் கணவரைத் தவிர ஏனைய அனைவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கந்தான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...எவ்வாறெனினும், இலங்கையில் மோதல் ஏற்படுவதற்கான மிகப் பிரதான பங்காளியாக இலங்கை அரசே உள்ளது. இதன் இனத்துவேச கொள்ளைகள் யுத்தம் ஏற்பட வழிவகுத்தன. இலங்கை அரசின் இராணுவப் படைகள் தமிழ்ப் பொதுமக்கள் மீது பலவழிகளில் இனப்படுகொலைகளை மேற்கொண்டன.

எண்ணுக்கணக்கற்ற குறிப்பாக பல பத்தாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பெரும்பாலான தமிழ் மக்கள் அவர்களது சொந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டனர். இந்த யுத்தமானது 30 ஆண்டுகளாக தொடர்ந்தது. நீண்டகாலமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களை தமது ஆளுகையின் கீழ் வைத்திருந்தனர். இங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிழல் அரசாங்கம் செயற்பட்டது. பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 'சமாதானப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. 2002ல் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. தமிழர் சுயநிர்ணய உரிமையை நோக்கி

கொள்வதற்கு இஸ்ரேல் தனது வான் கலங்களை வழங்கியிருந்தது. அத்துடன் விடுதலைப்புலிகளின் கப்பல்களை மூழ்கடிப்பதற்கான கப்பல் சேவைகளையும் இஸ்ரேல் வழங்கியிருந்தது. பிரிட்டன், இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், வேறும் சில நாடுகளும் இலங்கை இராணுவப் படைகளுக்கு பல்வேறு உதவிகளையும் வழங்கியிருந்தன.

இந்த விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு எந்தவொரு வெளித்தரப்பும் உதவி வழங்கவில்லை. புலம்பெயர் தமிழ்மக்கள் தவிர வேறெவரது உதவிகளும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. கியூபா, வெனிசூலா, பொலிவியா போன்ற நாடுகள்கூட விடுதலைப் புலிகளுக்கு உதவ முன்வரவில்லை. இவை இராணுவ ரீதியாக இலங்கை அரசாங்கத்துக்கு எந்தவொரு உதவியையும் வழங்காவிட்டாலும்கூட, அரசியல் தளத்தில் சில உதவிகளை அரசாங்கத்துக்கு

பட்டுள்ளன. அத்துடன் மேற்குக் கரையில் யூதக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டது போன்று, தமிழ் மக்களுக்குச் சொந்தமான இடங்களில் தற்போது சிங்களக் குடியேற்றங்கள் விரிவாக்கப்படுகின்றன. மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் தனியார் முதலீட்டுக்காக ஒதுக்கப்படுகின்றன.

**அண்மையில் மெல்போர்னில் இடம்பெற்ற *சோசலிஸ்ட் எலையன்ஸ்* சந்திப்பில், இதன் மெல்போர்ன் கிளை உறுப்பினரான *கிறிஸ் ஸ்லீ* வழங்கிய உரையைத் தழுவி ஆக்கப்பட்ட கட்டுரை-*கிறீன் லெஃவ்ட் வீக்லி* வெளியிட்டது**

தற்போது தமிழ் மக்கள் முகாம்களில் வாழ்கின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியவில்லை. இவர்களது நிலங்களை இலங்கை இராணுவத்தினர் தம்வசம், கொண்டுள்ளதுடன், சிங்களக் குடியேற்றங்களும் அமைக்கப்படுகின்றன. தமிழ் அரசியல் கைதிகள் தற்போதும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் காணாமல்போதல்களும், படுகொலைகளும் அரங்கேறிக் கொண்டேயிருக்கின்றன. இந்து ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். தமிழர்கள் தாமே தனித்து நின்று போராடி வெல்ல முடியாது. அவர்களுக்கு கூட்டணி தேவை. கிழக்கில் வாழும் தமிழ்பேசும் முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் விடுதலைப்புலிகள் தோற்றுவிட்டனர். அவர்களால் அதில் வெற்றிகொள்ள முடியவில்லை.

முஸ்லிம் மக்கள், இலங்கை பேரினவாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றுசேர வேண்டும். இலங்கையின் தென்பகுதியில், தமிழ் மக்களின் உரிமைகளை ஆதரித்து குரல்கொடுக்கும் சிங்கள சமவுடமை அமைப்புக்களுடன் தமிழ்மக்கள் தொடர்பை பேணிக்கொள்ள வேண்டும். இதன்மூலம் அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்துலக மட்டத்தில் இலங்கையின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்குவதற்கான செயற்பாடுகளைத் தமிழர்கள் மேற்கொள்ள வேண்டும். அரசியற் கைதிகள் விடுவிக்கப்படல், தமிழர் வாழிடங்களில் ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ள சிங்கள இராணுவப் படை

# ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை கோரிக்கைக்கு சமவுடமைவாதிகள் ஆதரவு

முன்னெடுக்கப்படும் எந்தவொரு நகர்வுகளையும் இலங்கை பேரினவாதிகள் எதிர்த்து நின்றனர். உண்மையில் இலங்கை அரசாங்கத்தின் கை, யுத்தத்தில் ஓங்கியிருந்தது. 2009மே, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த அனைத்து இடங்களும் இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அகப்பட்டுக்கொண்ட தமிழ் பொதுமக்கள் மீது இலங்கையின் கடல், தரை மற்றும் வான் படைகள் ஒன்று சேர்ந்து மேற்கொண்ட தாக்குதல்களில் ஒருசில வாரங்களில் 40ஆயிரம் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகின் பல்வேறு நாடுகளிடமிருந்தும் ஆதரவைப் பெற்றுக்



கொண்ட இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் வெற்றிபெற்றுக் கொண்டது. அமெரிக்காவானது, ஆயுதங்கள், தளபாடங்கள் மற்றும் பயிற்சி உள்ளடங்கலாக பல்வேறு உதவிகளை இலங்கைக்கு வழங்கியிருந்தது. அத்துடன் கண்காணிப்பு செய்மதிகளின் மூலம் விடுதலைப் புலிகளின் வழங்கற் பாதைகள் தொடர்பாகவும் அமெரிக்காவானது இலங்கைக்கு தகவலை வழங்கியிருந்தது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வான் குண்டுத் தாக்குதல்களை மேற்

வழங்கின. விடுதலைப்புலிகள் அமைப்பானது பயங்கரவாத அமைப்பு என இந்நாடுகள் கருதிக்கொண்டன தவிர, தேசிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையின் காரணமாகவே ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டனர் என்ற உண்மையை இந்நாடுகள் அங்கீகரிக்கத் தவறிவிட்டன.

தற்போது, யுத்தம் முடிவுற்ற பின்னர் இலங்கைத் தீவின் வடக்கு -கிழக்கு பிரதேசங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இத்தமிழர் வாழ் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்

அல்லது சேதமாக்கப்படுகின்றன.

தமிழ் மக்கள் வாழிடங்களில் அடக்குமுறைகள் அதிகம் காணப்படுகின்றன.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள், இர்ராணுவத்தினரின் வசமுள்ள தமது நிலங்களை மீட்பதற்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அண்மையில் பிரித்தானிய மகாராணியாரின் வைரவிழாவில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்கு சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை எதிர்த்து அங்கு வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள்

கள் வெளியேற்றப்படல், இடம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுதல் போன்றவற்றை முதன்மைப் படுத்தி விழிப்புணர்வுகள் வழங்கப்படவேண்டும். தமிழ் மக்கள் சுயநிர்ணயத்துடன் வாழ்வதனை அனுமதிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் கருத்துவாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும். இவ்வாறான கருத்து வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் தனித்த நாடொன்றில் வாழவிரும்புகிறார்களா, அல்லது ஐக்கிய இலங்கைக்குள் வாழ விரும்புகிறார்களா, அல்லது சுயாட்சி, இணைப்பாட்சிபோன்ற மூன்றாவது தெரிவை விரும்புகிறார்களா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். யுத்த மீறல்கள் தொடர்பில் அனைத்துலக, சுயாதீன விசாரணை நடாத்தப்பட வேண்டும் என தமிழர்கள் வலியுறுத்துகின்றனர். ஐ.நா.கண்காணிப்புடன் இலங்கையில் கருத்து வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்பதற்கு அவுஸ்திரலிய அரசாங்கம் தனது ஆதரவை வழங்கவேண்டும் என நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். அத்துடன் அவுஸ்திரேலியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகள் விடுவிக்கப்படுவதை அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் சமவுடமை கூட்டணி வேண்டிநிற்கிறது.

நன்றி: இணையம்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் விட்டுக்கொடுப்புடன் செயற்படத் தயார்

## சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

(திருகோணமலை)

**எமது வெற்றியை அரசு கபளீகரம் செய்வதை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தமிழத்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

திருகோணமலையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வன்முறைகளை பிரயோகித்து வெற்றியீட்ட முயற்சித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட 6 ஆயிரத்து 217 வாக்குகளே கூடுதலாக பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண ஆட்சியை எங்களுக்கு வழங்குமாறு தேர்தல் கால பிரசாரங்களின் போது நாம் தமிழ் பேசும் மக்களிடம் கோரிக்கை விடுத்தோம். எமது கோரிக்கையை ஏற்று எமது மக்கள் அந்த ஆணையை வழங்கியுள்ளனர்.

அதாவது தமிழரசுக்கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் வாக்களித்தனர். அவ் ஆணையை நிறைவேற்ற எந்தவொரு தமிழ் பேசும் மக்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் விட்டுக் கொடுப்புடன் செயற்படத் தயாராக வுள்ளோம்.

மக்களால் எமக்குத் தரப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்ற வேண்டியது எமது கடமை. இந்த தேர்தல் வெற்றியை அரசாங்கம் களவாட நாம் அனுமதிக்க மாட்டோம்.

அரசாங்கத் தரப்பு இப்போது பெற்றுள்ள சாதாரண வெற்றியைக் கொண்டு அவர்கள் ஆட்சியமைக்க அனுமதிக்க முடியாது. மேலும் கிழக்கு மாகாண ஆளுநர்- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மாகாண ஆட்சியை அமைக்க அழைத்தால் அதனை நாம் சட்ட ரீதியாக தடுப்போம்.

எந்த ஒரு இனத்திற்கும் தீங்கு செய்ய வேண்டும் என்பது எமது கருத்தல்ல. 11 உறுப்பினர்களைக் கொண்ட எமது கட்சி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து ஆட்சி அமைக்க கோரி ஆளுநருக்கு நாம் கடிதம் அனுப்பியுள்ளோம்.

இந்தக் கூட்டின் சார்பாக முன்மொழியப்படும் முதலமைச்சரின் தலைமையில் ஆட்சி அமைக்க ஆளுநரைக் கோருவோம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வாழ்வாதார திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகள் வழங்கல்

(பூநகரி)

வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 30 குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் ஒரு மாதம் முதிர்ச்சி அடைந்த கோழிக்குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜெயபுரம் தெற்கு, வடக்கு கிராம சேவகர் பிரிவில் 18 குடும்பங்களுக்கும் முழங்காவில் கிராம சேவகர் பிரிவில் 12 குடும்பங்களுக்குமே இக்கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் வி.சொக்கநாதன் கலந்து கொண்டார். (அ-84)

# பரிந்துரைகளை அமுல்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும்

## பொதுநலவாய அமைப்பின் செயலாளர்

உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடபில் ஒத்துழைப்பு வழங்க முடியும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தக்கூடிய இயலுமையை உருவாக்கிக் கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவிகள் வழங்கப்படும்.

இலங்கையில் நடைபெறவுள்ள 58 ஆம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அபிவிருத்தி, ஜனநாயகம் மற்றும் பல்வகைமை போன்றவற்றை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்க முடியும்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் கமலேஷ் சர்மா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அறிய வருகின்றது. (அ-2)

# தேர்தல் ஆணையாளர் தேசப்பிரிய பக்கச்சார்பின்றி செயற்பட்டார்

## ஜோன் அமரதுங்க எம்.பி.பாராட்டு

(கொழும்பு)



தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பக்கச்சார்பின்றி செயற்பட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயாதீனமானதும் நியாயமானதுமான முறையில் தேர்தலை நடத்தவே தேர்தல் ஆணையாளர் முனைப்புக்காட்டினார்.

கடந்த காலங்களில் பதவி வகித்த தேர்தல் ஆணையாளர்களை விடவும் பக்கச்சார்பற்ற நிலையில் தற்போதைய தேர்தல் ஆணையாளர் கடமையாற்றினார்.

தேர்தல் காலத்தில் சிறு சிறு சம்பவங்களும் முறைகேடுகளும் இடம்பெற்ற போதிலும் அதற்கு தேர்தல் ஆணையாளர் பொறுப்புதாரி அல்ல. இதேவேளை, பெருமளவான ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் இம்முறை தேர்தலில் வாக்களிக்கவில்லை. அரசாங்கத்தின் மீதான அதிருப்தி காரணமாக வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றார். (அ-2)

# தேர்தல் முறைகேடு இல்லாவிட்டால் மூன்று ஆசனங்களை பெற்றிருக்கலாம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை விடவும் எதிர்க்கட்சிகளே கிழக்கில் கூடுதலான வெற்றியை ஈட்டியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண சபையை நிர்வாகம் செய்யும் அதிகாரம் எதிர்கட்சிகளுக்கே வழங்கப்பட வேண்டும் எனவும் அது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரமவிற்கு அறிவிக்கவுள்ளது.

அரச சொத்து துஷ்பிரயோகம் உள்ளிட்ட தேர்தல் முறைகேடுகளினால் மெய்யான முடிவுகளில் மாற்றம் ஏற்பட்டது. முறைகேடுகள், மோசடிகள் நடைபெற்றிருக்காவிட்டால் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னும் மூன்று ஆசனங்களை வென்றிருக்கக் கூடும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக திட்டமிட்ட வகையில் பிரசாரங்களும் அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டது என்றார். (அ-2)

# வள்ளுவர்புரம் கிராம மக்களின் தேவைகள் பூர்த்தியாகவில்லை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வள்ளுவர்புரம் கிராம மக்கள் அடிப்படை தேவைகளின்றி அல்லற்படுகின்றனர். தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய யாராவது முன் வருவர்களா? என்ற ஏக்கத்துடன் அம் மக்கள் காத்திருக்கின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்படி கிராமத்தில் 317 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் 104 குடும்பங்களுக்கே நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய குடும்பங்கள் தற்காலிக வீட்டிலேயே வசித்து வருகின்றனர். இத் தற்காலிக வீடுகளும் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. மழை காலத்திற்கு முன் நிரந்தர வீடுகளை அமைத்து தர கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இக்கிராமத்திற்கு மின்சாரம் இல்லை. மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் வேலைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மூன்று உயர் வீதிகள் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இங்குள்ள 2 கோயில்கள் போரினால் பாதிக்கப்பட்டு அழிவடைந்து புனரமைக்கப்படாத நிலையிலுள்ளது. இங்குள்ள முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட நிலையில் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த யாராவது உதவ முன்வர வேண்டும்.

இங்கு கோழி வளர்ப்பு, விவசாயம், கூலி ஆகியவற்றையே தமது தொழிலாக கொண்டு வறுமைக்கோட்டின் கீழும் விதவைகளாகவும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, உரிய தரப்பினர் தமது அவல நிலையைக் கருத்திற்கொண்டு உதவ வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# புனித பவுல் ஆலய ஆண்டு விழாவில் நடைபெற்ற மருத்துவ முகாம்

## 300 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

(பூநகரி)

முறிகண்டி தென் இந்திய திருச்சபையின் புனித பவுல் ஆலய 31 ஆவது ஆண்டு விழாவும் அதையொட்டிய நடமாடும் மருத்துவ முகாமும் கடந்த வாரம் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வைத்திய கலாநிதி தயாளினி தியாகராசா தலைமையில் வைத்திய குழுவினரால் பல்வேறு நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டன.

இம்மருத்துவ முகாமில் கலந்து கொண்ட மக்களின் வேண்டுகோளுக்கமைய ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வரும் சனிக்கிழமைகளில் நடமாடும் வைத்திய சேவையை வழங்குவதற்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.

இச்சேவையில் சாந்தபுரம், செல்வபுரம், பொன்னகர், அறிவியல் நகர், முறிகண்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று பயனடைந்தனர்.

இம்மருத்துவ முகாமில் தென் இந்திய பேராயர் அருட்கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராசாவினால் நற்கருணை ஆராதனை சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. (அ-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கெட்டிக்கார சகோதரர்கள்

முன்னொரு காலத்தில் ஒரு வயதான ஏழைக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர் வயதாகி இறக்கும் தறுவாயில் தன் மகன்களிடம் சொன்னார்:

எனதருமை மக்களே. நம்மிடம் பொன் இல்லை. பொருள் இல்லை. ஆகவே நீங்கள் அறிவுச் செல்வத்தை நிறையத் திரட்டிக் கொள்ள வேண்டும். எதுவும் உங்கள் பார்வையில் இருந்து தப்பி விடக்கூடாது. அப்படிப்பட்ட அறிவை நீங்கள் பெற்று விட்டால் உங்களுக்கு எந்தக் கேடும் வராது. நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கலாம். சொல்லிவிட்டு இறந்து போனார்.

சதோதரர்கள் மூவரும் சேர்ந்து இனி என்ன செய்யலாம் என்று யோசித்தனர். ஒருவன் சொன்னான்.

பல இடங்களுக்குச் சென்று உலகைச் சுற்றிப்பார்ப்போம். தந்தை நம்மிடம் சொல்லி விட்டுப்போனபடி அறிவுச் செல்வத்தைத் திரட்டுவோம்.

மற்றவர்கள் இதை ஏற்றுக் கொண்டு பயணத்தைத் தொடங்கினர். பல இடங்களில் சுற்றிய பின் பாதங்கள் வலியெடுத்ததால் சற்றுநேரம் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் புறப்பட்டனர். சிறிதுநேரத்தில் ஒரு பெரிய நகரம் தெரியக்கண்டனர்.

நகரத்தை நெருங்கியதும் மூத்த சகோதரன் நின்று கீழே தரையைக் கவனித்தான்.

சற்றுநேரத்திற்கு முன் இங்கே ஒரு பெரிய ஒட்டகம் சென்றிருக்கிறது.

சற்றுநேரம் நடந்ததும் இரண்டாவது சகோதரன் சொன்னான்.

ஒட்டகத்திற்கு ஒரு கண் இல்லை.

மேலும் சற்றுத்தூரம் நடந்ததும் மூன்றாவது சகோதரன் சொன்னான்:

ஒட்டகத்தின் மீது ஒரு பெண்ணும் ஒரு சிறு குழந்தையும் சென்றிருக்கிறார்கள்.

சிறிது நேரத்தில் ஒருவன் குதிரை மீது அங்கு வந்தான்.

குதிரை வீரனே நீ எதையாவது இழந்துவிட்டு தேடிக்கொண்டிருக்கிறாயா? மூத்தசகோதரன் கேட்டான்.

ஆம், நீங்கள் சொல்வது உண்மைதான்.

நீ இழந்தது பெரிய ஒட்டகம். அதற்கு இடது கண் இல்லை. அதில் ஒரு பெண்ணும் ஒரு சிறு குழந்தையும் பயணம் செய்தனர். என்ன நாங்கள் சொல்வது சரியா?

இப்போது குதிரை வீரனுக்கு மூன்று சகோதரர்கள் மீது சந்தேகம் உண்டாகிவிட்டது.

நீங்கள் என்னுடைய ஒட்டகத்தைப் பிடித்து எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறீர்கள். உண்மையைச் சொல்லிவிடுங்கள். மிரட்டினான் அந்த ஆள்.

உன்னுடைய ஒட்டகத்தை நாங்கள் பார்த்ததே இல்லை என்று சகோதரர்கள் பதிலளித்தார்கள்.

அப்படியென்றால் என்னுடைய ஒட்டகத்தைப் பற்றிய விபரங்கள் உங்களுக்குளப்படித்தெரியும். நான் நம்பமாட்டேன். நீங்கள் என்னுடைய ஒட்டகத்தை எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறீர்கள்.

சகோதரர்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அந்தக் குதிரை வீரன் நம்பவேயில்லை. கடைசியில் வழக்கு அரசனிடம் சென்றது.

அரசே என் மனைவியும் குழந்தையும் ஒரு கண் இல்லாத ஒரு பெரிய ஒட்டகத்தின் மீது அமர்ந்து என்னைப்பின் தொடர்ந்து வந்தார்



கள். ஆனால் வழியில் எப்படியோ தவறவிட்டார்கள். நான் அவர்களைத் தேடி வந்தபோது வழியில் இவர்களைப் பார்த்தேன். நான் இவர்களிடம் எதுவும் கேட்காமலேயே இம்மூவரும் அந்த ஒட்டகம் பெரியது. அதற்கு ஒரு கண் இல்லை. அதில் ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் இருந்தனர் என்று என்னிடம் சொன்னார்கள். அந்த ஒட்டகம் இவர்களிடம்தான் இருக்கிறது. அவற்றை மீட்டுத்தருமாறு உங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மன்னரும் மூன்று சகோதரர்களை நோக்கி திருடர்களே இந்த ஆளுடைய ஒட்டகத்தையும் மனைவியையும் குழந்தைகளையும் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்.

அரசே நாங்கள் திருடர்களல்ல. அந்த ஆளுடைய ஒட்டகத்தையும் மனைவியையும் குழந்தையையும் பார்த்ததேயில்லை.

பின் எப்படி அந்த ஒட்டகத்தைப் பற்றித்திறம்பட விபரித்தீர்கள்? நீங்கள் பொய் சொல்கிறீர்கள்.

அரசே எதையும் தவறாமல் கவனமாக உற்று நோக்க எங்கள் பிள்ளைப்பிராயத்திலிருந்தே நாங்கள் பழகிக்கொண்டோம். யாவற்றையும் கவனமாகப் பார்ப்பதற்கும் சிந்திப்பதற்கும் நாங்கள் நெடுங்காலம் செலவிட்டுக் கற்றுக் கொண்டோம். அதனால்தான் ஒட்டகத்தைப் பார்க்காமலே அதைப்பற்றி எங்களால் விபரிக்கமுடிந்தது.

கண்ணால் பார்க்காது ஒன்றைப் பற்றி அவ்வளவு நன்றாகத் தெரிந்து கொள்ளமுடியுமா?

அரசர் சந்தேகத்துடன் கேட்டார்.

முடியும் என்று சகோதரர்கள் பதிலளித்தார்கள்.

சரி சோதித்துப்பார்த்துவிடலாம்.

அரசர் தன் அமைச்சரைக் கூப்பிட்டு அவர் காதில் ஏதோ சொன்னார்.

சிறிதுநேரத்தில் அரண்மனைச் சேவகர்கள் ஒரு பெரிய பெட்டியைக் கையில்பிடித்து எடுத்துவந்து அதை மெதுவாய்க்கீழே வைத்து விட்டு விலகிச் சென்றனர். சகோதரர்கள் மூவரும் தொலைவில் இருந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். பெட்டியை எங்கிருந்து கொண்டுவந்தார்கள்? அதை எப்படித் தூக்கினார்கள்? எப்படித்தரையில் வைத்தார்கள்? என்பதைக்கூர்ந்து பார்த்துக் கொண்டார்கள்.

அந்தப்பெட்டியில் என்ன இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்க்கலாம். அரசர் கேட்டார்.

அரசே அந்தப்பெட்டியினுள் ஒரு சிறு பந்து போன்ற பொருள் இருக்கிறது என்றான் மூத்த சகோதரன்.

அது மாதுளை என்றான் இரண்டாவது சகோதரன்.

அது பழுக்காத மாதுளை என்றான் மூன்றாவது சகோதரன்.

உடனே அரசர் சேவகரைக் கூப்பிட்டு அந்தப்பெட்டியைத் திறக்கச்சொன்னார். பெட்டி திறக்கப்பட்டதும் சகோதரர்கள் சொன்னது போலவே பழுக்காத மாதுளை இருந்தது.

உடனே அரசர் என்ன ஆச்சரியம் நீங்கள் இதன்மூலம் திருடர்கள் இல்லை என்பதை நிரூபித்து விட்டீர்கள் என்றவர் குற்றம் சாட் டிய குதிரை வீரனை நோக்கி நீ ஒட்டகத்தை நன்றாகத் தேடிக் கண்டுபிடி. இவர்கள் உன் ஒட்டக த்தைத் திருடவில்லை என்று கூறி அவனை அனுப்பினார்.

அரசர் சகோதரர்களிடம் ஒட்டகத்தைப்பற்றிய விபரங்கள் உங்களுக்கு எப்படித் தெரிந்தன என்று கேட்டார்.

புழுதியில் படிந்த பெரிய தடங்கள் அங்கே ஒரு பெரிய ஒட்டகம் சென்றதைக் காட்டியது என்றான் முதல் சகோதரன்.

பாதையின் வலது பக்கத்திலிருந்த புற்கள் மட்டுமே கடித்துத்தின்னப்பட்டிருந்தன. இதிலிருந்து ஒட்டகத்திற்கு இடது கண் இல்லை என்பதை உணர்ந்தேன் என்றான் இரண்டாவது சகோதரன்.

ஓரிடத்தில் ஒட்டகம் தரையில் மண்டியிட்டு அமர்ந்த தடத்தைக்கண்டேன். அதனருகே மணலில் ஒரு பெண்ணின் பூட்ஸ் பாதங்களின் சுவடும் பக்கத்தில் ஒரு சிறிய குழந்தையின் பாதச் சுவடுகளும் தென்பட்டன. அதன் மூலம் ஒட்டகத்தில் ஒரு பெண்ணும் குழந்தையும் பயணம் செய்தனர் என்பதை உணர்ந்தேன் என்றான் மூன்றாவது சகோதரன்.

அது சரி. இந்தப்பெட்டியில் ஒரு பழுக்காத மாதுளை இருந்ததை எப்படி உங்களால் ஊகிக்க முடிந்தது என்று கேட்டர் அரசர்.

இரண்டு வேலையாட்கள் அந்தப்பெட்டியைத் தூக்கிவந்த முறையிலிருந்தே அது கனமானதல்ல என்பது தெரிந்தது என்றான் மூத்த சகோதரன்.

அவர்கள் பெட்டியைத் தரையில் வைத்தபோது அதனுள் உருண்டையான ஒரு பொருள் பெட்டியின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு உருளும் சத்தம் கேட்டது. பெட்டி தோட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்பதிலிருந்தும் அந்தப் பொருள் உருண்டையானது என்பதிலிருந்தும் அந்தப்பொருள் மாதுளையாக இருக்கும் என்று ஊகித்தேன். உங்கள் அரண்மனையில் பல மாதுளை மரங்கள் இருப்பதையும் வரும்போது பார்த்தேன் என்றான் இரண்டாவது சகோதரன்.

ஆண்டின் இந்தப்பருவத்தில் மாதுளைகள் பழுக்காமலேயே தான் இருக்கின்றன. ஆகையால் தான் அது பழுக்காத மாதுளை என்று உணர்ந்தேன் என்றான் மூன்றாவது சகோதரன்.

மூன்று சகோதரர்களின் மதிநுட்பத்தை அரசர் வியந்து பாராட்டினார்.

பணத்திலும் பொருளிலும் நீங்கள் செல்வந்தர்களாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அறிவில் நீங்கள் மூவரும் மிகப்பெரிய செல்வந்தர்கள் என்ற அரசர் அவர்களை மனதாரப் பாராட்டிப் பரிசுகளை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வருகையை தமிழகம் எதிர்க்கவில்லை

## சில அரசியல் கட்சிகளே எதிர்க்கின்றன

(சென்னை)



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத்தியப் பிரதேச மாநிலத்துக்கு வருவதை தமிழக மக்கள் எதிர்க்கவில்லை. ஒரு சில அரசியல் கட்சியினர் மட்டுமே எதிர்க்கின்றனர் என முன்னாள் மத்திய அமைச்சரும் மத்திய பொதுக்கணக்கு குழுத் தலைவருமான முரளி மனோகர் ஜோஷி தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் குமாரகோவில் நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றபின் கடந்த சனிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

நிலக்கரி சுரங்க முறைகேடு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கலாம் என பிரதமர் மன்மோகன் சிங் கூறியிருப்பது வியப்பைத் தருகின்றது. இதுகுறித்து மத்திய பொதுக் கணக்குக் குழு விசாரித்தாலே உண்மை அனைத்தும் மக்களுக்குப் புரியும். கூடங்குளம் அணு உலை குறித்து அரசும் விஞ்ஞானிகளும் முன்னாள் ஜனாதிபதியுமான ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஆகியோர் பாதுகாப்பானது எனக் கூறியுள்ளனர்.

ஆனாலும் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்து வேண்டும். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத்தியப் பிரதேச மாநிலத்துக்கு வருவதை அந்த மாநில மக்களோ தமிழக மக்களோ எதிர்க்கவில்லை. தமிழகத்திலுள்ள சில கட்சிகள்தான் எதிர்க்கின்றன.

தேர்தல் முன்கூட்டியே வர வேண்டுமென நாங்கள் போராட மாட்டோம். மத்தியிலும் மாநிலத்திலும் எந்தெந்த கட்சிகளுடன் கூட்டணி அமைப்போம் என இப்போது எதுவும் கூற முடியாது.


தேர்தல் வரும் போது கட்சித் தலைமை முடிவெடுக்கும். மத்திய அரசு பல்வேறு துறைகளில் தோல்வியடைந்துள்ளது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாதது அரசுக்குப் பின்னடைவே ஆகும் என அவர் கூறினார். (அ-2)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தனபாலசிங்கம்

**(பிராந்திய முகாமையாளர், வடக்கு மற்றும் கிழக்கு**
(Commercial Credit PLC)



கரவெட்டி, விக்னேஸ்வரக் கல்லூரி வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி தனபாலசிங்கம் 09.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்புமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தீப்தகுமார் (UK), ராஜேஸ்குமார் (வல்வெட்டித்துறை நகரசபை), லலித்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலேந்திரன், பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமையாள், சுமங்கலி ஆகியோரின் அன்பு மாமனாரும் அவந்தி, ஆரணா ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.09.2012 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி.** — **தகவல்: குடும்பத்தினர்**

(C-1017)

## மரண அறிவித்தல்

### கந்தையா வல்லிபுரம்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லிபுரம் நேற்றுமுன்தினம் (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம்- வள்ளிப்பிள்ளையின் மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மான், காலஞ்சென்ற சரவணமுத்து, ஆறுமுகசாமி ஆகியோரின் அன்பு சகோதரரும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் தயாவதி (அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாலயம்), சிவலட்சுமி (பிரதேச செயலகம், கரவெட்டி), கணேசலிங்கம் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஞானசீலன் (பிரதேச செயலகம், கரவெட்டி), செல்வகுமார் (சுதேச மருத்துவத் திணைக்களம்), வாசுகி (மாங்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிவேதிகா, ஆர்நிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.09.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. ஒரு மணிக்கு இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேத்தாவடி இடைக்காடு,
அச்சுவேலி.
T.P. 0770870321

(395)

தகவல்:-
மகன் வ. கணேசலிங்கம்.

# அமைதி ஆர்ப்பாட்ட நிகழ்வில் கலந்து கொள்ள அழைப்பு

(வவுனியா)

வவுனியா குருமன்காடு காளி கோவிலடியில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரார்த்தனை மற்றும் அமைதி ஆர்ப்பாட்ட நிகழ்வில் நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருப்போர், சரணடைந்து காணாமல் போனோர், கடத்தப்பட்டு காணாமல் போனோர் ஆகியோர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் அணி திரண்டு கலந்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்பு குழுவின் அழைப்பாளருமான மனோகணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் மக்கள் கண்காணிப்பு குழுவின் சிரேஷ்ட உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு தமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறது என தெரிவித்துள்ள மனோகணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மற்றும் காணாமல் போனோர் பிரச்சினையே இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரதான மனித உரிமை பிரச்சினையாகும்.

எமது பிரச்சினைகளை இந்த அரசாங்கத்துக்கு மீண்டும் மீண்டும் நாம் எடுத்து கூறி வந்துள்ளோம். இதனாலேயே இத்தகைய ஒரு பிரச்சினை இருப்பது உலகின் கவனத்துக்கு வந்துள்ளது.

தமது உறவுகள் பிரிந்து வாழும் அனைத்து குடும்பங்களின் உறுப்பினர்களையும் நண்பர்களையும் ஒன்று சேர்க்கும் பணியில் மக்கள் கண்காணிப்பு குழு ஈடுபட்டு வருகின்றது.

இந்த அடிப்படையில் இன்றைய உலக சூழல் கூடி வரும் வேளையில் எமது மக்களை மீண்டும் ஒன்றுகூட்டி எமது குரலை ஓங்கி ஒலிப்பது எமது கடமையாகும். (அ-9)

# மண்டலாபிஷேகம்

(சிவநகர்)

உருத்திரபுரம் எள்ளுக்காடு (சக்திபுரம்) முருகன் கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவக்கிரக தூபிக்கு நாளை புதன்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெற்று நாளை புதன்கிழமை கும்பபூசையுடன் கிரியைகள் ஆரம்பமாகி தூபிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-3-254)

# ஜோதிட ஆலோசனைக்கமைய அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

ஜோதிட ஆலோசனைகளுக்கு அமைவாக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில ஜோதிட வல்லுநர்களின் ஆலோசனைக்கு அமைய எதிர்வரும் மாதத்தில் அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

முழு அளவிலான மாற்றமாக அமையாத போதிலும் சில அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதுடன் சிலருக்கு புதிதாக அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக கல்வி, உயர்கல்வி மற்றும் பெற்றோலிய வள அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதியின் ஜோதிட ஆலோசகராகக் கருதப்படும் சுமனதாச அபேகுணவர்த்தனவிடம் பல அமைச்சர்கள் ஆலோசனை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜோதிடத்தில் நம்பிக்கையில்லாத சில அமைச்சர்கள் கூட பரிகார பூஜைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
September 2012 to February 2013
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
(சி-1016)
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் விமானங்கள் ஈரான் அணு உலைகளை தாக்கலாம்

(ஜெருசலேம்)

எந்நேரத்திலும் இஸ்ரேல் விமானங்கள் ஈரானுக்குள் பறந்து அணு உலை மீது குண்டுவீசி தாக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.


இது தொடர்பாக அடிக்கடி இராணுவ இரகசிய கூட்டங்களும் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக அமெரிக் காவை சேர்ந்த முன்னாள் விமானப்படை அதிகாரியும் இராணுவ தாக்குதல் தொடர்பாக கட்டுரைகள் எழுதிவரும் வால்டர் போயன் என்பவர் இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் நெருங்கியிருப்பதாக கூறியுள்ளார்.

ஆனால் இந்த தாக்குதல் மூலம் இஸ்ரேல் பெரிய அளவில் சாதிக்க முடியாது என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அதற்கு பதிலடி கொடுப்பதற்காக ஈரானும் தயாராகி வருகிறது. அதன் விமான படைகள் முழுவீச்சில் தயார் நிலையில் இருக்கின்றன. விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன. இஸ்ரேல் தாக்கினால் உடனே இஸ்ரேல் மீது போர் தொடுத்து அந்த நாட்டில் தாக்குதல் நடத்துவதற்கும் ஈரான் தயாராகி வருகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளின் எச்சரிக்கையை மீறி ஈரான் அணுகுண்டு தயாரித்து வருகிறது. இந்த அணுகுண்டு தங்கள் நாட்டுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும் என்று இஸ்ரேல் கருதுகிறது.


எனவே அதை அழிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே ஈராக் இதேபோல அணுஉலையை



உருவாக்கிய போது இஸ்ரேல் திடீரென விமான தாக்குதல் நடத்தி அவற்றை முற்றிலும் அழித்தது. அதைப் போன்ற தாக்குதல் ஈரான் மீது நடக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

சமீப காலமாக இஸ்ரேல் தனது படையை பல்வேறு வகையிலும் தயார்படுத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக விமானப்படை பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. ஈரான் அணு உலையை தாக்குவதற்காகத்தான் இந்த பயிற்சி நடப்பதாக கூறப்படுகிறது. (அ-2)

# ஈராக் துணை பிரதமருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு



ஈராக் துணை ஜனாதிபதி தாரிக் அல் ஹாஷ்மி 45 பேரை கொன்றது தொடர்பான வழக்கில் அந்நாட்டு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை அறிவித்துள்ளது.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின் அமெரிக்காவின் உதவியுடன் அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. துணை ஜனாதிபதி பதவியில் இருந்த தாரிக் அல் ஹாஷ்மி 26 சம்பவங்களில் 46 பேரை சுட்டுக்கொல்ல உத்தரவிட்டதாக குற்றம் சமத்தப்பட்டது.

இந்த வழக்கில் அவரை ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும்படி பக்தாத் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், துருக்கி சென்ற ஹாஷ்மி மீண்டும் நாடு திரும்பவில்லை. இதற்கிடையே ஹாஷ்மி மீதான குற்றம் நிரூக்கப்பட்டதால் அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு இவர் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். கடந்த 2010 இல் நடந்த தேர்தலில் மீண்டும் இவர் துணை ஜனாதிபதியாக தேர்வானார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சிரியா விவகாரம் குறித்து புடின்-ஹிலாரி சந்திப்பு

சிரியா விவகாரம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள் ளார்.

ரஷ்யாவிலுள்ள வ்லாடிவோஸ்டோக் நகரில் நடைபெறும் ஆசியா-பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் 20 இற்கும் மேற்பட்ட நாட்டுதலைவர்கள்பங்கேற்றுள்ளனர்.

இதில் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கலந்து கொண்டுள்ளார்.





பின்னர் அவர் சிரியா விவகாரம் குறித்து ரஷ்யா ஜனாதிபதி புடின், வெளிவிவகாரத்துறை அமைச்சர் செர்கிய் லாவ்ரோவ் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதுபற்றி ஹிலாரி கிளின்டன் கூறுகையில், சிரியா பிரச்சினை தொடர்பாக ரஷ்யாவின் நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தீர்வு காண்பது குறித்து பேச்சு தொட ரும் என்று தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கு ரஷ்யாவும் சீனாவும் ஆதரவளித்து வருகின்றன. இந்நிலையில் தற்போதைய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஹிலாரி கிளின்டன் கூறியிருப்பது சிரிய பிரச்சினையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது. (அ-2)

# சீன அமைதி விருதுக்காக இருவர் பரிந்துரைப்பு





சீன அமைதி விருதுக்கு ஐ.நா.முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான், மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் உள்ளிட்டோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

கன்புஷியஸ் அமைதி விருதுக்கு பரிந்துரை செய்யப்படுபவர்களின் பெயர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

சீன அரசின் சிபாரிசு எதுவும் இல்லாமல் சதந்திரமாக முடிவெடுத்தே இப்பெயர்களை அறிவித்ததாக விருதை வழங்கும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன், தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவத்ரா, சீன சமூக சேவகர் வாங் டிங்கோ, பீஜிங் பல்கலை.பேராசிரியர் டேங் யீங், சீன விஞ்ஞானி யுவான் லாங்பிங், 11 ஆவது பன்சென் லாமா ஆகியோரின் பெயர்களும் இவ்விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

திபெத்திய மத தலைவர் தலாய்லாமாவுக்கு அடுத்து 2 ஆவது நிலையில் உள்ளவர் பன்சென்லாமா. ஆனால், இவர் சீன அரசால் நியமிக்கப்பட்டவர் என்பதால் இவரை திபெத்தியர்கள் மதத்தலைவராக ஏற்றுக் கொள்வதில்லை. (அ-2)

# ஈராக்கின் 20 இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு

## 58 பேர் பரிதாப உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் ஒரேநாளில் 20 இடங்களில் தாக்குதல்கள் நடந்தன. தொடர்குண்டு வெடிப்புக்கள் நடந்தன. இதில் 58 பேர் பலியாகினர்.

டுஜெய்ல் பகுதியில் உள்ள இராணுவ முகாம்மீது நேற்று முன்தினம் துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 வீரர்கள் பலியாகினர் 8. பேர் காயமடைந்தனர் என்று பலட் பகுதியில் உள்ள வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்குப் பகுதியில் உள்ள கிழக்குக் நகரில் அரசு எண்ணெய் நிறுவனத்தில் பொலிஸ் வேலைக்கான தேர்வு நடைபெற்று வந்தது. தேர்வுக்காக வரிசையில் நின்றவர்களுக்கு அருகில் இருந்த கார் திடீரென வெடித்துச் சிதறியது. இதில் 7 பேர் உயிரிழந்தனர். நாசிரியா பகுதியில் பிரெஞ்சு தூதரகம் பல ஹோட்டல்கள் நிறைந்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 குண்டுகள் வெடித்ததில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 கார்கள் சின்னாபின்னமாகின.

ஷியா பிரிவைச் சேர்ந்த மக்கள் அதிகம் வாழும் ஹுசென்னியா பகுதியில் வீதியில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் பொலிஸ்காரரும் வீதியில் நடந்து சென்ற ஒருவரும் பலியாகினர். 4 இராணுவ வீரர்கள் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

மேலும் ஈராக்கின் பஸ்ராவி லிருந்து சிரியா எல்லையில் உள்ள டல் அப்தார் வரை பல இடங்களில் நேற்று முன்தினம் கார்க் குண்டுகள் வெடித்தன. மைசன் மாகாணத்தில் இமாம் அலி அல் ஷர்கி என்ற ஷியா முஸ்லிம் மசூதிக்கு வெளியே 2 கார் குண்டுகள் வெடித்தன.

இதில் 14 பேர் இறந்தனர். இதே நேரம் பல இடங்களில் நடந்த குண்டு வெடிப்புக்களில் மொத்தம் 58 பேர் பலியாகினர். (அ-2)



ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து டில்லி செல்லும் வழியில் சென்னைக்கு வந்த பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் ஜெயலலிதா பூங்கொத்து கொடுத்து வழியனுப்பி வைத்ததைப் படத்தில் காணலாம்.

# தகாத உறவு குற்றச்சாட்டில் பெண்ணுக்கு 100 கசையடிகள்

## ஆணுக்கு 10 ஆண்டுகள் சிறை

(மாலே)

தகாத உறவு கொண்ட பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்யாத பெண்ணுக்கு 100 கசையடிகள் தண்டனை விடுத்து மாலைதீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த தண்டனையை அவர் 18 வயது பூர்த்தியாகும்போது அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மாலைதீவைச் சேர்ந்த குறித்த பெண் ஒருவர் 29 வயது ஆணுடன் தகாத உறவு வைத்துக் கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டது. அந்நாட்டு சட்டப்படி சிறாரை தகாத எண்ணத்துடன் தீண்டினால் கூட குற்றமாகக் கருதப்படுகிறது. இந்த குற்றம் நிருபணமானால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு 10 முதல் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

இதன்படி மேற்படி பெண்ணுடன் உறவு வைத்துக் கொண்ட 29 வயது ஆணுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்த மாலே நீதிமன்றம் பெண்ணுக்கு 100 கசையடிகளை தண்டனையாக விதித்தது. மேலும் இத்தண்டனையை அப்பெண் 18 வயது பூர்த்தியடையும் போது அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவம் இல்லாவிட்டால் சுதந்திரம், மக்களாட்சி என்பதற்கு அர்த்தமே இருக்க முடியாது.

-நேரு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## முதல்நாள் படிப்பு; மறுநாள் பரீட்சை பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமா?

ஐன்ஸ்டின் என்ற விஞ்ஞானியைச் சந்தித்த சிலர் ஐயா! மூன்றாம் உலகப் போர் நடக்குமா? என்று கேட்டார்கள்.

அதற்கு ஐன்ஸ்டின் மூன்றாம் உலகப்போர் நடக்குமா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது!

ஆனால் நான்காம் உலகப் போரில் கற்களும் பொல்லுகளுமே ஆயுதங்களாக இருக்கும் என்றார்.

மூன்றாம் உலகப் போர் நடந்தால் மனித சமூகம் மீண்டும் வேடுவ வாழ்வுக்குச் சென்று விடும் என்பதை உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டின் அற்புதமாக தெரியப்படுத்தினார்.

போர் நடைபெறும் என்பதைவிட அப்படியொரு போர் நடந்தால், மனித சமூகத்திற்கு ஏற்படக்கூடிய அழிவு பற்றிச் சிந்திப்பதே அர்த்தமுடையதும் புத்திசாலித்தனமானதுமாகும்.

எனினும் எங்கள் இலங்கை திருநாட்டில் அழிவுகள் பற்றி எவரும் சிந்திப்பதில்லை.

மாறாகதத்தம்மனநிலைக்கேற்றகோபாவேசத்திற்கும் பழிவாங்கலுக்குமேமுன்னுரிமைகொடுக்கின்றனர்.

இதுபோல உயர் பதவிகளில் இருப்பவர்கள், அந்தப் பதவிமூலம் மனித சமூகத்திற்கு–நலிவுற்ற மக்களுக்கு செய்யக்கூடிய நல்லவற்றைச் செய்வோம் என்று நினைப்பதில்லை.

மாறாக தமக்கு கிடைத்த பதவி மூலம் எவ்வளவு பொருளாதாரத்தை தமக்கென எடுத்துக் கொள்ளமுடியுமோ அந்தளவுக்கு எடுத்துக்கொள்ளுதல் என்ற முடிபில் உறுதியாக இருக்கின்றனர்.

இதில் அரசியல்துறை மிகவும் மோசமாக இருக்கின்றது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எடுத்துக் கொண்டால் நிலைமை புரியும்.

உண்மையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல், யாருக்குத் தோல்வியென்று எவரேனும் கேட்டால் அது தமிழர்களுக்கே தோல்வி என்று கூறிவிட முடியும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரச தரப்புக்குக் கிடைத்த ஆசனங்கள் ஒப்பீட்டு ரீதியில் அதிகமானவை முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்த ஆசனங்கள், கிழக்கின் ஆட்சியைத் தீர்மானிக்கும் பலத்தைக் கொண்டவை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட ஆசனங்கள் எங்கள் பலத்தை நிரூபிப்பதற்குப் போதுமானவையல்ல என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

உண்மையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிங்கள மக்கள் வாக்களிக்காமல் விட்டிருந்தால், முஸ்லிம் மக்கள் வாக்களிக்காமல் இருந்திருந்தால் அதில் குறை காண்பது முடியாத காரியம்.

ஆனால், தமிழ் மக்கள் வாக்களிக்காமல் இருப்பது அல்லது தமிழ் மக்களின் வாக்கு அரச தரப்பை நோக்கிச் செல்வதென்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

இருந்தும் அது நடந்துள்ளதெனில் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அர்ப்பணிப்பற்ற–சுய இலாபநோக்குடையதன்மையே காரணம் எனலாம்.

தமிழ் மக்களுக்கான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறியது மட்டுமன்றி தமிழ் மக்களிடம் நம்பகத்தன்மையை ஏற்படுத்தாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முதல் நாள் படித்து மறு நாள் பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் செல்லலாம் என்ற நினைப்பில் செயற்படுவதை விடுத்து களத்தில் இறங்கி தமிழ் மக்களுக்குப் பணி செய்ய வேண்டும்.

# இந்திய மீனவர்கள் எவரும் இலங்கைச் சிறையில் இல்லை

## இந்.வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் இந்திய மீனவர்கள் எவரும் தடுப்பில் இல்லையென இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா கூறியதை இராமேஸ்வரம் மீனவர் சங்கங்கள் விமர்சித்துள்ளன.

தமது சமூகத்தைச் சேர்ந்த 5 பேர், போதைவஸ்து கடத்தினார்கள் என்ற பொய்க்குற்றச்சாட்டின் பேரில் கடந்த வருடத்திலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கூறிய அவர்கள், இந்த மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

போதைவஸ்து கடத்திய குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் மட்டுமே இலங்கையில் உள்ளனர் என அமைச்சர் கிருஷ்ணா கூறியதையிட்டு தாம் அதிர்ச்சியடைவதாக தமிழ்நாடு கரையோர இயந்திரப்படகு மீனவர் சங்கத் தலைவரும் செயலாளரும் தெரிவித்தனர்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வி.மைத்திரேயன் கொண்டுவந்த கவனயீர்ப்பு பிரேரணைக்கு பதிலளிக்கும் முகமாகவே, இந்திய மீனவர்கள் எவரும் இலங்கையில் தடுத்து வைக்கப்படவில்லை எனவும் இந்திய அரசாங்கம் இலங்கையுடன் மீனவர்கள் பாதுகாப்பு தொடர்பில் பேசிவருவதாகவும் கூறினார். (எ-11)

## கண்காணிப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான செப்ரெம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ)

## வெளிச்ச வீடுகளை புனரமைக்க யாழ்.மீனவர்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யுத்தகாலத்தில் அழிவடைந்த வெளிச்ச வீடுகளை மீண்டும் அமைத்து தொழில் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள உதவி செய்யுமாறு யாழ்.குடாநாட்டு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குடாநாட்டில் கரையோரங்களில் முன்பிருந்த வெளிச்ச வீடுகள் எதுவும் தற்போது இயங்கவில்லை. இதனால் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

நீண்ட தூரத்திற்குச் சென்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்பு கரை திரும்பும் போது வெளிச்ச வீடுகள் மீனவர்களுக்கு சரியான இடத்தைக் காட்டும்.

ஆனால் கடந்த கால யுத்தச் சூழலினால் அவை முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

எனவே மழை காலம் ஆரம்பிக்க முன்பு வெளிச்ச வீடுகளை அமைத்து தொழில் நடவடிக்கைகளை சிரமம் இன்றி மேற்கொள்ள உதவி செய்ய வேண்டும் என மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-6)

## வெளிவாரிப் பரீட்சை அலகுகள் பட்டம் பெறுவோர் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலை மற்றும் வணிகமாணி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது.

இம்முறை 224 மாணவர்கள் கலைமாணி பட்டம் பெறுவதுடன், இவர்களில் 12 மாணவர்கள் இரண்டாம் தரம் கீழ்ப் பிரிவிலும், 212 மாணவர்கள் சாதாரண பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

அத்துடன் 26 மாணவர்கள் வணிகமாணி பட்டம்பெறுவதுடன், இவர்களில் மூன்று மாணவர்கள் இரண்டாம் தரம் கீழ்ப் பிரிவிலும், 23 மாணவர்கள் சாதாரண பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என வெளிவாரிப் பரீட்சை அலகு இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார். (எ)

## திருநெல்வேலியில் வாள்வெட்டு சந்தேகத்தில் 7 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தோடு தொடர்புடைய சந்தேக நபர்கள் ஏழு பேரினை தாம் கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இவ் வெட்டுச் சம்பவத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்று வருகின்றார்.

இவ் வாள்வெட்டுச் சம்பவத்தையடுத்து நல்லூர் கோவில் வீதி பகுதியிலும் மேலும் ஒரு வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த வாள் வெட்டுச் சம்பவத்திற்கும் திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கும் தொடர்புள்ளது.

நல்லூர் அம்மன் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபரினை திருநெல்வேலியில் இடம்பெற்ற கொலையோடு சம்மந்தப்பட்ட சந்தேக நபராக தாம் கைது செய்துள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவிக்கின்றது.

குறித்த நபரோடு மேலும் ஆறு பேர் குறித்த கொலையோடு சம்மந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தாம் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக் கைது நடவடிக்கை தொடர்பாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசனிடம் கேட்டபோது, குறித்த கொலையோடு சம்மந்தப்பட்ட கொலைக் குற்றவாளிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் எனினும் அவ் விபரங்களினை வெளியிடுவது ஏனைய குற்றவாளிகளினை கைது செய்வதில் சிக்கல் நிலை ஏற்படும் எனவும் ஏனைய குற்றவாளிகள் தப்பித்து விடக் கூடும் என்பதனால் கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களினை தற்போதைக்கு வெளியிட வேண்டாம் என கேட்டுக் கொண்டார். (எ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மன உறுதி வேண்டும்



அன்பின் மூலமாகச் செயற்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தே தீரும்.

பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தும் பிள்ளைகள் கடவுளையும் மகிழ்ச்சியடையச் செய்கின்றனர்.

மன ஒருமையுடன் பணியாற்றுங்கள். ஆர்வத்துடன் ஈடுபட்டால் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

தவறை எண்ணி வருந்தவேண்டாம். நமக்கு வழிகாட்டும் தெய்வமாக இருப்பதால் தவறைப் பெரும்பேறாகக் கருதுங்கள்.

அமைதி, மன்னிக்கும் பெருந்தன்மை, மனஉறுதி ஆகிய நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளுங்கள். வாழ்வில் வளரத் தொடங்குவீர்கள்.

அடுத்தவர் கருத்தை கண்மூடித்தனமாகப் பின்பற்றாதீர்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள். அதே சமயத்தில் உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.

விதையின் சக்திதான் மரமாக வளர்கிறது. அதுபோல ஒவ்வொருவரின் வாழ்வும் அவரவர் கொண்டிருக்கும் மன ஆற்றலைப்பொறுத்தே அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கைதடி மத்தி வளர்மதி வி.க. நடத்தும் கிரிக்கெட் போட்டியில் கைதடி கிங்ஸ் லெவன், கைதடி றோயல் சலஞ்சர்ஸ் வெற்றி

கைதடி மத்தி வளர்மதி வி.க. நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட வளர்மதி பிறிமியர் லீக் (VPL) போட்டிகள் நேற்று முன்தினம் வளர்மதி வி.க. மைதானத்தில் ஆரம்பமாகியது.

இப்போட்டிகளில் தென்மராட்சி ரீதியில் பிரதிநிதித்துவமுடைய வீரர்கள் பங்கு பற்றுகிறார்கள். இப்போட்டிகளில் மொத்தமாக 5 அணிகள் பங்கு பற்றுகின்றன. லீக் முறையில் இடம்பெறும் இப்போட்டியில் ஒவ்வொரு அணியும் தலா இரு முறை ஏனைய அணிகளுடன் மோதும் முடிவில் முதல் 4 நிலைகளில் உள்ள அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறும்.

நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கைதடி கிங்ஸ் லெவன் வி.க. எதிர் மட்டுவில் வளர்மதி வி.க. மோதியது. இவ் ஆட்டத்தில் கைதடி கிங்ஸ் லெவன் வி.க. 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி கிங்ஸ் லெவன் விளையாட்டுக் கழகம் 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 63 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அதிக பட்சமாக சுகுணன் 20 ஓட்டத்தினையும் விதுசன் 11 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் சார்பாக கேதீஸ் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டினையும் பானு 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் கைப்பெற்றினர்.

64 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் 12.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 30 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அமல் 13 ஓட்டத்தினையும் பந்து வீச்சில் விதுர்சன் 8 ஓட்டத்திற்கு 5 விக்கெட்டினையும் விந்தன் 10 ஓட்டத்திற்கு 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இரண்டாவது ஆட்டத்தில் கைதடி றோயல் சலஞ்சர் வி.க. எதிர் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க. மோதியது. இவ் ஆட்டத்தில் கைதடி றோயல் சலஞ்சர்ஸ் வி.க. 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# கலைவாணி அணி காலிறுதிக்கு தகுதி




(சாவகச்சேரி)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழத்தினரால் நடத்தப்பட்டு வரும் தென்மராட்சி பிரதேச மட்டத்திலான அனோஜன் நினைவு மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மட்டுவில் கலைவாணி அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. அணிக்கு 9 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் 12 ஓவர்களைக் கொண்டதாகும். கடந்த வாரம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பிக்கப் பட்ட இப்போட்டியில் மட்டுவில் கலைவாணி அணியை எதிர்த்து நுணாவில் அம்பாள் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கலைவாணி அணி 12 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு களமிறங்கிய நுணாவில் அம்பாள் அணி 9 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் 23 ஓட்டங்களை அதிகமாகப் பெற்றுக் கலைவாணி அணி காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (3-29)

# அரச அதிபர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம்; கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகம் தகுதி

(கரவெட்டி)



அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்திற்கு கரவெட்டி பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் ஆகிய அணிகள் பரபரப்பான அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் 15 அணிகள் பங்குபற்றும் அரை இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரு போட்டிகளும் பரபரப்பாக நடைபெற்றது.

இதில் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது.

இதில் இடைவேளையின் போது இரு அணிகளும் தலா ஒரு கோலை போட்டனர். பின்னர் இரு அணிகளும் தமது முழுப்பலத் தையும் வெளிப்படுத்தி ஆடிய போதும் கரவெட்டி பிரதேச செயலக அணி மேலும் இரு கோல்களைப் போட்டு இறுதியில் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது.

இரு அணிகளும் தமது முழுப்பலத்தையும் வெளிப்படுத்தி ஆடிய போதும் போட்டி பரபரப்பாக இடம்பெற்றது.

இறுதியில் 1:0 என்ற கோல்கணக்கில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று பருத்தித்துறை பிரதேச செயலக அணி இறுதியாட்டத்திற்கு தெரிவாகியது. அரச அதிபர் வெற்றிக் கிண்ண இறுதியாட்டப் போட்டிக்கு பலம்வாய்ந்த இரு பிரதேச செயலக அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-24)

# கற்கோவளம் உதயதாரகை வி.க. உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் டயமன்ஸ் அணி சம்பியன்








கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் டயமன்ஸ் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தினை வென்றுள்ளது. கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக தலைவர் இ.பரமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இவ்இறுதிப் போட்டியில் டயமன்ஸ் அணியும் மனோகரா அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி மோதிக் கொண்டன. பரபரப்பாக நடைபெற்ற இவ் இறுதிப் போட்டியில் முதல் பாதியில் டயமன்ஸ் அணி ஒரு கோல் போட்டு முன்னிலை பெற்றது. இடைவேளைக்கு பின்னர் இரண்டாவது பாதியில் டயமன்ஸ் அணி இரண்டு கோல் போட பதிலுக்கு மனோகரா அணி ஒரு கோல் போட்டது. அதன் பிற்பாடு டயமன்ஸ் அணி மீண்டும் இரண்டு கோல் போட்டது. அதன் அடிப்படையில் டயமன்ஸ் அணி 5:1 என்ற ரீதியில் அபார வெற்றி பெற்றது. நடைபெற்று முடிந்த போட்டிகளின் படி டயமன்ஸ் அணி சம்பியன் பட்டத்தினையும் மனோகரா அணி இரண்டாம் இடத்தினையும் சென். பீற்றர்ஸ் சிவானந்தா அணி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் அமிர்தலிங்கம்
## (ஆசாரி மூர்த்தி)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.118/1, உதய நகர் மேற்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அமிர்தலிங்கம் (ஆசாரி மூர்த்தி) அவர்கள் 08.09.2012 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் (ஆசாரி சின்னத்தம்பி) கற்பகம் ஆகியோரின் பாசமிகு மகனும், சின்னையா-சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மருமகனும், சாந்தலட்சுமியின் அன்புக் கணவரும், துதிலட்சுமி (சறோ), மகேந்திரகுமார் (மகேஸ்வரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜீவதாஸ் (பிரான்ஸ்), கிருசா, கிசியந்தி, கிருசாந்தினி, தவஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகுமார், சோதீசன், உசா ஆகியோரின் மாமனாரும், கனகரத்தினம், அன்னலட்சுமி, மனோகரன் (டென்மார்க்), புஸ்பராணி, புனிதராசன் (ஜேர்மன்), வரதராசன் (ஜேர்மன்), சுந்தரலிங்கம், ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் அமரர் தேவராணி, மருதலிங்கம், அமரர் யோகராசா, வவா, றஞ்சி, பிரதீபா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், பாவேந்தன், பாகீசன், பிரியங்கா, கோநிலா, கோபிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 11.09.2012 இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.118/1, உதயநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(வி-1018)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசுடன் இருந்து கொண்டு ...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாணம் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைக் கொண்ட முஸ்லிம் மாகாணமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். இலங்கையின் ஏனைய 7 மாகாணங்களும் சிங்களவர்களினதும், வட மாகாணம் தமிழர்களுக்கானது என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் கிழக்கு மாகாணம் முஸ்லிம் முதலமைச்சரைக் கொண்ட மாகாணமாக இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பது என்றால் அரசாங்கத்தில் இருந்து விலகியே அதனைச் செய்தாக வேண்டும். எப்படியயிருந்தாலும் உறுதியான முடிபுடனேயே நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

எவ்வாறானாலும் புதன்கிழமைக்கு முன்னர் முடிபு எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

மட்டக்களப்பில் கல்குடா தொகுதி அரசியல்வாதிகளின் அடாவடித்தனம் காரணமாக கல்குடா தொகுதிக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்க வேண்டிய ஒரு உறுப்பினர் இல்லாது போயுள்ளது. அதனைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

பிரதேசவாதம் கடந்த ஒரு அரசியலை செய்யவுள்ளேன். இத் தேர்தலில் எமக்கு ஆதரவு தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு மிகுந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது சேவைதமிழ் முஸ்லிம் என்ற வேறுபாடு இன்றி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித் தார். (எ-11)

## மண் சரிவில் ...

துருப்பினர் காயமடைந்த நிலையில் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பகல் இந்த சம்பவம் இடம்பெற்றதாக இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது திடீரென இந்த மண் சரிவு ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நீதிமன்றத் தாக்கு ...

இவர்கள் 40 பேரையும் வரும் 24-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மேலதிக நீதவான் ஆர்.திசாநாயக்க பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

நீதிமன்றத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலின் ஊடாக நீதித்துறையின் செயற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக்கோரி, மன்னார் சட்டத்தரணிகள் தொடர்ச்சியாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தார்கள்.

நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களைத் தாங்கள் கண்ணால் கண்டு அடையாளம் காட்டி விபரங்கள் தெரிவித்திருந்த போதிலும், அவர்களில் முக்கியமானவர்களைப் பொலிஸார் கைது செய்யத் தவறியிருந்ததாக மன்னார் சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

குறிப்பிட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பொலிஸாருக்கு எதிராக தமது போராட்டம் ஆரம்பமாகும் என எச்சரிக்கை விடுத்த சட்டத்தரணிகள், கடந்த திங்கட்கிழமை தமது பணிப் புறக்கணிப்பை கைவிட்டு கடமைக்கு திரும்பியிருந்தார்கள்.

இந்தப் பின்னணியிலேயே சந்தேக நபர்கள் 21 பேர் பொலிஸாரிடம் சரணடைந்த சம்பவம் நடந்துள்ளது. (எ-11)

## ஜனநாயகம் ...

மட்டுமே ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டு விட்டதாக அர்த்தப்படாது.

யாருக்கு வாக்களித்தோம் என தெரிவித்தால் அதனால் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். உண்மையை பேச முடியவில்லை. சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட முடியவில்லை.

தேவையான இடத்தில் கூட்டம் ஒன்றை நடத்த முடியவில்லை என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (எ-11)

## ஆளுநருக்கு ...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சிறிலங்கா காங்கிரஸின் முடிபு கிடைத்தவுடன் ஆளுநரை நேரில் சந்தித்து பேசவிருப்பதாக சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (எ-11)

## கிழக்கின் ஆட்சி ...

வேட்பாளர்களில் 8 பேரும் தோல்வியடைந்துள்ளனர்.

பிள்ளையான் உள்ளிட்ட நால்வர் மாத்திரமே வெற்றிபெற்றுள்ளனர். பிரதி அமைச்சர் கருணாவின் சகோதரி ஞானபிரகாசம் ருத்ரமலரும் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். (எ-11)

## வரலாற்றுத் தவறுகளை மாற்றியமை ...

தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் சிறுபான்மையாக வாழ்கிறார்கள்.

அங்கே எங்கள் ஒரே நோக்கம் தமிழ் பிரதிநிதித்துவம்தான். இந்தத் தேர்தலில் நாம் எடுத்த முடிபு தீர்க்கதரிசனமான சரியான முடிபு என்பதை இன்று காலம் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. இன்று சப்ரகமுவ உட்பட நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எமக்கு பாராட்டுகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

சப்ரகமுவவிலும், வட-மத்திய மாகாணத்திலும் இந்த அரசு அசுர பலத்துடன் ஆட்சியமைத்துள்ளது. எனவே அங்கு தமிழ் பிரதிநிதித்துவம் என்பதைவிட எம்மால் எதையும் எதிர்பார்க்க முடியாது.

ஆனால், கிழக்கில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும், ஐக்கிய தேசியக் கட்சியும் பெரும்பான்மை ஆசனங்களை பெற்றுள்ளன. இது வரலாறு அளித்துள்ள சந்தர்ப்பம் ஆகும்.

ஆனால், கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். எனவே பெரும்பான்மை தமிழ், முஸ்லிம் மக்களை பிரதானமாக பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், சுதந்திரமாக தமது ஆட்சியை அமைக்க வேண்டும். அது நியாயமானது.

அதன் மூலமாகவே எமது மக்களின் தேசிய அபிலாசைகளை உலகறியச் செய்யலாம்.

குறிப்பாக முஸ்லிம் தேசியத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்வதற்கு இதுவே அரசியல் ரீதியான வழிமுறையாகும்.

அதற்கான சிறப்புமிக்க சந்தர்ப்பத்தை வரலாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கியுள்ளது.

இது நடைபெறாவிட்டால், முஸ்லிம் எழுச்சி பேரினவாத பெருங்கடலில் கலந்து காணாமல் போய்விடும். வரலாறு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமா? அதற்கும் வரலாறு தான் பதில் சொல்ல வேண்டும் என்றார் மனோ கணேசன். (எ-11)

## காணாமல் ...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு தமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறது என மனோ கணேசன் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மற்றும் காணாமல்போனோர் பிரச்சினையே இன்றைய கால கட்டத்தில், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரதான மனித உரிமைப் பிரச்சினையாகும்.

எமது பிரச்சினையை இந்த அரசாங்கத்துக்கு மீண்டும் மீண்டும் நாம் எடுத்துக்கூறி வந்துள்ளோம். இதனாலேயே இத்தகையதொரு பிரச்சினை இருப்பது உலகின் கவனத்துக்கு வந்துள்ளது.

தமது உறவுகள் பிரிந்து வாழும் அனைத்து குடும்பங்களின் உறுப்பினர்களையும், நண்பர்களையும் ஒன்று சேர்க்கும் பணியில் மக்கள் கண்காணிப்புக் குழு ஈடுபட்டு வருகின்றது.

இந்த அடிப்படையில், இன்றைய உலக சூழல் கூடிவரும் வேளையில், எமது மக்களை மீண்டும் ஒன்றுகூட்டி எமது குரலை ஓங்கி ஒலிப்பது எமது கடமையாகும்.

இதை நாளை புதன்கிழமை வவுனியாவில் உணர்வுடன் செய்வோம் என்று அவர் கூறினார். (எ-11)

## மின்சார சபையின் ...

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போதே அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எதிர்கால மற்றும் நிகழ்கால வேலைத்திட்டம் சம்மந்தமான கூட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வறிக்கையில் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான இரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

இதனை வாசித்த அமைச்சர் டக்ளஸ்,

இவ்விரண்டு கட்டிடமும் எங்கே கட்டப்பட்டு வருகின்றது என அங்கிருந்த இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளிடம் வினவினார்.

அதற்கு அவ்உயர் அதிகாரிகள், தங்களுக்குத் தெரியாது எனப் பதில் அளித்தனர்.

இதனையடுத்து உடனடியாக அமைச்சர், தொலைபேசி ஊடாக இலங்கை மின்சார சபையின் வேறொரு உயர் அதிகாரியுடன் தொடர்பை ஏற்படுத்தினார். அவரும் தனக்கு இந்தக் கட்டிடம் எங்குள்ளது எனத் தெரியாது என பதிலளித்தார்.

இதற்கு அமைச்சர், சினிமாவில் நகைச்சுவை நடிகர் வடிவேலு கிணற்றைக் காணவில்லை என தேடியது போல உங்கள் செயற்பாடு உள்ளது என நகைச்சுவையாக ப்திலளித்தார். (எ-6)


### வாடகைக்கு

கொழும்பு-யாழ்ப்பாணத்துக்கான பொதிகளை ஏற்றியிறக்கக்கூடிய ஹெண்டயினர் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புக்கு: 0773144952

(அ-1021)

### மின் உபகரணங்கள் திருத்துதல்

Washing Machine, Fridge, TV மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டிற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

அத்துடன் வீட்டு வயறிங் வேலைகளும் Bathroom comert திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778000748

(396)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

### சிங்கள வகுப்புகள்

சிங்கள மொழி எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும்.

Batch I திங்கள் - வெள்ளிவரை 8.30AM---10.30AM

Batch II 4 PM--- 6 PM

ஆரம்பம்: 14.09.2012

தொழில் புரிவோர்களுக்கான வகுப்புகள்

சனி, ஞாயிறு 4 PM - 6PM நடைபெறும்.

விபரங்களுக்கு:

ஆசிரியர்: J.R.சூரி

JAFFNA TECHNICAL INSTITUTE

No.:7, பலாலி வீதி யாழ்ப்பாணம்.

T.P.: 0778249949, 0718561654

(393)

### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English With Grammar** 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning Course)

**Diploma In English** 1 1/2 Months

- எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teachers' Panel & Individual Attention
- Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சையை யாழ் நகரில் முதல் முறையாக 2013 மேத மாதத்தில் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

Batch 1 : 10.09.2012

Batch 2 : 12.09.2012

Batch 3 : 15.09.2012

மேலதிக விபரங்களும் இலவச ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

BCHS No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna

(அ-1015)

Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074

### தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கைநெறி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். 2012 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி,MCS தொ.பே.772395895

BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org